ஓம் சக்தி

# மாலைக்கு மாலை

★

'யாழ்ப்பாணன்'
கவிதைகள்
முதலாந் தொகுதி

★

பிரசுரம்:

இந்தியாவில்
சக்தி காரியாலயம்
சென்னை 14.

இலங்கையில்
வடலங்கா புத்தகசாலை
பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தொகுதி—1

# மாலைக்கு மாலை

—'யாழ்ப்பாணன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பதிப்பு: ஆகஸ்ட் 1948

சக்தி அச்சுக்கூடம்
சென்னை.

விலை ரூ. 2-8-0

# நாமக்கல் கவிஞர் எழுதுவது:

V. Ramalingam Pillai.

NAMAKKAL.

15-9-1947.

அன்பர் திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றியுள்ள பாடல்கள் பலவற்றை நான் படித்துப் பார்த்தேன். சிலவற்றை அவரே சொல்லக் கேட்டேன். அப்பாட்டுகள் மிகவும் எளிய நடையில் உயர்ந்த கருத்துகள் அழகுறப் பொதிந்தனவாக இருக்கின்றன.

சிறப்பாக அவர் சிறுவர்களுக்கென்றே பாடியிருக்கிற கவிதைகள் மிகவும் நன்றாக இருக்கின்றன. அவை பள்ளிக் கூடங்களில் பாடமாக போதிப்பதற்கு மிகவும் தகுந்தவை.

திரு. சிவக்கொழுந்து அவர்களுடைய பாட்டுகளுக்குப் போதிய ஆதரவு செய்ய வேண்டியது அன்பர்களுக்கும் அரசாங்கத்துக்கும் கடமை. விரைவில் அவருடைய கவித்திறமை அதற்குரிய பெருமைகளை அடைந்து, அவருடைய ஊக்கம் அதிகரித்து இன்னும் நல்ல நல்ல புதுப்புது பாடல்களை இயற்றி சிறப்புற்று விளங்க வேண்டுமென்று இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

வெ. இராமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

உலகினி லொருத்தர் காணா
வுண்மைசே ரன்பு காட்டிப்
புலமையும் புகழும் நல்ல
பொய்யிலா வாழ்வுஞ் சேரத்
தலமதி லென்னை வைத்தாய்
தவத்தினால் விளைந்த பேறே!
விலையிலா அன்புக் கீடாய்
மென்மைசேர் தொடைய லேற்பாய்!



## அறிஞரின் நல்லுரைகள்

### EXTRACTS

தமிழில் தங்களுக்குள்ள ஆர்வம் மிகவும் பாராட்டற்குரியது. செய்யுள் இயற்றுவது தங்களுக்கு இலகுவான காரியம் என்று தெரிகிறது.

—டி. கே. சிதம்பரநாத முதலியார்

தங்கள் பாடல்களைப் பற்றி அறிய மிக்க மகிழ்ச்சி. கவிதை அழகாயிருக்கிறது.

—எஸ். குருசாமி

தங்கள் கவிதை மிக நன்றாயிருக்கிறது. நல்ல சுலப நடையில் விஷயச் செறிவுடன் பொருந்தி யுள்ளது.

—பொ. கிருஷ்ணன்

யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# மாலைக்கு மாலை

'யாழ்ப்பாணன்'
கவிதைகள்
முதலாந் தொகுதி

பிரசுரம் :

இந்தியாவில்
சக்தி காரியாலயம்
சென்னை—14.

இலங்கையில்
வடலங்கா புத்தகசாலை
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பதிப்பு—1250 பிரதிகள்

(உரிமை பதிவு செய்யப்பட்டது.)

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்
ராயப்பேட்டை :: சென்னை—14.

# முன்னுரை

இலங்கை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
வித்துவான்
டாக்டர் க. கணபதிப் பிள்ளை B.A., Ph.D. (Lond)
அவர்கள் எழுதியது

ஒரு நாட்டில் நிலவிவருஞ் சிற்பங்கள், ஓவியங்கள், கவிதைகள் ஆதியன அந்நாட்டினது முன்னேற்றத்தையும், கலைப்பண்பையும், காலா காலத்து அங்கு வாழ்ந்து வந்த மக்களினது நாகரீக மேம்பாட்டையும் நமக்கு நன்கு அறிவுறுத்துஞ் சாதனங்களாகும். அழிந்தும் அழியாப் புகழுடன் விளங்கும் அனுரதபுரி ஆயிரங்கால் மண்டபமும், தம்பளை குகைக் கோயிலும், தென்னிந்திய திருக்கோபுரச சிற்பங்களும், இன்னபிறவும் நாகரீகத்தின் உயர்வை அடைந்துள்ளோம் என மமதை கொள்ளும் மேல்நாட்டினரைத்தானும் ஒரு கணம் நிணற வைத்துத் தலைபணியச் செய்கின்றன. சிகிரியாச் சித்திரங்களும், அசந்தாக்குகை ஓவியங்களும் இன்னும் நம்முடன் அளவளாவிக் கதைத்து உறங்கிக் கிடக்கும் நமது உணர்ச்சிகளைக் கிளர்த்தி

விடுகின்றன. கம்பன் கவிதை வாயிலாக நாம் மிதிலைக்குச் சென்று இராமனுடனும், சீதையுடனும் மற்றும் ஆங்கு வதியும் நாகரீக மக்களுடனும் உறவாடுகின்றோம். ஆகவே சிற்பங்கள் ஓவியங்கள் கவிதைகள் ஆதியன ஒரு நாட்டு மக்களினது இன்ப வாழ்வுக்கு மட்டுமின்றி அவர்களது பிற்காலச் சந்ததியாரின் முன்னேற்றத்துக்கும் சிறந்த வழிகாட்டிகளாகும்.

தமிழ் நாட்டில் காலந்தோறும் பல புலவர்கள் தோன்றிப் பல்சுவை நிரம்பிய தமது பாடல்களால் நாட்டை வளம்படுத்திச் சென்றனர். மேல்நாட்டுக் கலைத் தொடர்பினோடு நமது தமிழ் நாட்டிலும இன்று கவிதை பலபல பான்மையில் விரிந்து செல்லுகின்றது. பாரதி வகுத்துள்ள வழிப்படி அது பல துறைகளிலும் பாய்ந்து மக்களுக்கு அறிவைப் புகட்டி உணர்ச்சி வேகத்தை ஓங்கச் செய்கின்றது. தேசீயம், மாதரறம் மற்றும் பல பண்புகளையும் விளைவிக்கின்றது.

இத்தகைய கவிதைப் பணியில் நமது அன்பர் திரு. வே. சிவக்கொழுந்து அவர்களும் முனைந்திருத்தல் பாராட்டத்தக்கது. கலைவாணியின் அருட்பொழிவினால் செழுமையுற்ற உள்ளத்தில் ஊற்றெடுத்துத் தங்கு தடையின்றிச் சுரந்து பாயும் இவரது கவிதைப்பெருக்கு தமிழகத்தில் ஒரு புத்தொளியை வீசி அனைவரையும் மகிழ்விக்கும் என எண்ணுகிறேன்.



உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுதல் சிறந்த கவிக்கு அழகு. இந் நலத்தோடு இவரது கவிதைகளில் இலகுவான சொற்களின் பிணைப்பு, புத்தம் புதிய பொருட்கள், உயரிய எண்ணக் கருத்துகள் ஆதியனவும் நிரம்பியிருப்பதை நாம் காண்கிறோம். மேலும் பழையன போற்றிப் புதியன புகுத்தும் பண்பும் இவரிடத்தில் நன்கு அமைந்திருக்கின்றது. சில காலம் தனது சுய பெயருடனும் பின்னர் "யாழ்ப்பாணன்" என்னும் புனை பெயருடனும் இவர் பத்திரிகைகள் வாயிலாகத் தமிழ் நாட்டுக்கு உதவி நம்மை மகிழ்வித்த கவிதைகளும் மற்றும் புதிய கவிதைகளும் சேர்ந்து வெளிவருந் தொகுதிகள் தமிழன்பர்களுக்குச் சிறந்த நல் விருந்தாகும்.

வாணியின் அருள் மென்மேலும் இவருக்குப் பெருகுவதாக!

க. கணபதிப் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியும் கவிதையும்

"கவிக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு புதிதாக மணமான தம்பதிகளின் தொடர்பைப் போன்றது. கணவன் தன் புது மனைவியைத் தொடவோ பிடிக்கவோ ஆலிங்கனம் செய்து கொள்ளவோ விரும்புகிறான். ஆனால், புதுப்பெண் நாணமுறுகிறாள். தன்னைக் காத்துக்கொள்ள எண்ணிக் கோணிக் கொள்ளுகிறாள்; ஒரு புறம் ஓடி ஒளிக்கிறாள். கவிதையின் நிலைமையும் இதுவே. சில சமயம் கவிதை, கீழ்ப்படிதலுள்ள வேலைக்காரனுக்கு ஒப்பாக, தலைவணங்கிக் கவியின் முன்பு நிற்கும். சில சமயம் அவனைப்பார்த்து மிக மரியாதையுடன் கபடு சூது அறியாத குழந்தையைப் போலச் சிரிக்கும். சில சமயம் வெட்கத்தினால் முகத்தை மறைத்துக் கொள்ளும். கவி இதையெல்லாங்கண்டு எட்டிப்பிடிக்க முயலும்பொழுது சஞ்சலம் வாய்ந்த மான்போன்று துள்ளிக் குதித்து ஓடிவிடும். சில சமயம் சின்னஞ்சிறு விஷயங்களுக்கும் தலைகுனிந்துகொண்டு கிட்டவந்து நிற்கும். சில சமயம் தன் இரு கைகளாலும் கவியை இறுகக் கட்டி வெட்கத்தைவிட்டு ஆலிங்கனம் செய்து கொள்ளும். இதுதான் கவிகளும் கவிதைக்கும் உள்ள தொடர்பு."

—ரா. வீழிநாதன்

(காவேரி புரட்டாதி 1946)

# கவிதையும் இலக்கணமும்

"இலக்கணத்துக்குக் கவிஞன் அடிமையாகக் கூடாது. இலக்கணந்தான் கவிஞனுக்கு அடிமையாகிக் கைகட்டிச் சேவகம்புரியவேண்டும். அப்போதுதான் கவியின்வேகம் யாப்புக்கோப்பிலிருந்து திமிறிக்கொண்டு வெளிவரும். யமகம், திரிபு, ரதபந்தம், நவபங்கி முதலிய ஜாலவித்தைகள் கவிதை அல்ல; அவைகளைக் கவிதை என்று ஒப்புக் கொள்ளவும் முடியாது.

யாப்பு—எதுகை மோனைகளின் பயனை அறிந்து அவைகளை ஆட்கொண்டால்தான் நல்லகவிகளை உண்டாக்கமுடியும் என்பதையும் சில மறுமலர்ச்சியாளர்கள் உணர்ந்துதானிருக்கிறார்கள். யாப்பும் எதுகையும் கவிகளுக்குப் பலன் அளிப்பதைப் பயன்படுத்தித் துயரளிப்பதை ஒதுக்கி நல்ல கவிகளும் புது ரூபங்களில் எழுதி வருகிறார்கள். இலக்கணம் உணர்ச்சிக்குச் சறுக்கிடும்போது அதை விலக்கியோ தாவியோ பாதை மாற்றியோ செல்கிறார்கள். அதாவது கவியின் ஜீவனுக்கு உரமூட்டும் எதுகை மோனைகள் எங்கேனும் அதே ஜீவனைக் குலைக்க முனைந்தால் இலக்கணத்தை வெற்றி கண்டோ விலக்கியோ ரிதுமையும் ஜீவனையும் காப்பாற்றுகிறார்கள். இந்தப் புதிய பாதையின் வெற்றியைப்பற்றி இனிமேல்தான் முடிவு கூற முடியும்."

—ரகுநாதன்

(குமரி மலர் மார்ச் 1948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்முகம்

இலக்கணங் கற்றே னல்லன்
இலக்கிய அறிவு மஃதே
நலத்தினில் மிக்க தென்று
நான்புனை பாடல் தன்னைத்
தலத்திவித் தொகுதி யாக்கித்
தமிழகந் துய்க்கத் தந்தேன்
நிலத்தின ரன்போ டேற்று
நேர்பிழை பொறுப்பர் மன்னே.

பராசக்தி அன்னையின் அருள், பற்றுதலுடையாரின் கனிந்த உள்ளன்பு, இதயத்தை ஈர்க்குங் காட்சிகள், இடையிடை மனத்திலெழுந் தோற்றங்கள், கற்பனைகள் ஆதியன எமது கவிதையின் ஊற்று நிலையம். இதயத்தில் அதிர்ச்சி ஏற்பட்டுத் துடிப்புண்டாகக் கவிதை பிறக்கும். அக்கணமே கவிதையைக் குறித்துக் கொள்ளத் தவறின் இதயத் துடிப்பும் ஓய்ந்துவிடும். பின்னர் இதே துடிப்பை வருவித்து முந்திய உணர்ச்சி வேகத்துடன் கவிதை



புனைதல் அசாத்தியம். கவிதைப் பித்தில் தனிய அலைய இடமின்றிப் பல ஜோலிகளில் உழன்றுகொண்டிருக்கும் எமக்குக் கவிதை தோற்றுங் காலத்து அதனைக் குறித்துக் கொள்ளுதலும் இயலாது. உணர்ச்சி வேகத்தி லெழுங் கவிதை போன்று உணர்ச்சியை மீட்டும் வருவித்துக் குறித்துக்கொள்ளுங் கவிதைகள் அதிகஞ் சோபிப்பதில்லை. இருவகைக் கவிதைகளும் இங்கு கலந்திருத்தல் கூடும். அவற்றைப் பாகுபடுத்தி அனுபவிக்கும் பொறுப்பு அன்பர்களைச் சேர்ந்தது.

எமது கனவு நனவாகும் வண்ணம் இக் கவிதைத் தொகுதியைச் சென்னையில் கவின்பெற அச்சிட்டுதவிய சக்தி காரியாலயத்தாருக்கு எமது நன்றி. கவிதைகளை அன்புடன் உவந்தேற்கும் புதுமைப் பித்தர்களுக்கு எமது வணக்கம்.

15—8—48 யாழ்ப்பாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்

1. அருள் வேட்டல் ... ... ... 1
2. சக்தியின் இருப்பிடம் ... ... 5
3. மாலைக்கு மாலை ... ... ... 7

## மொழி

4. தமிழ் மகள் வருக ... ... ... 11
5. இளந்தமிழன் இதயம் ... ... 13
6. தமிழா! தூக்கங் கலைந்திடுவாய் ... 16
7. வீரத் தமிழா எழுந்திடுவாய் ... ... 18

## வாழ்த்து

8. பாரதம் இனிது வாழி! ... ... 23
9. ஜவகர் வாழிய ... ... ... 25
10. கோவைஎழுத்தாளர்மகாநாடு வாழ்த்துப்பா 28
11. தொழிலாளர் மாண்பு ... ... 30
12. திருமண வாழ்த்து ... ... ... 32
15. புதுமைப் பெண் ... ... ... 33
16. கவிதைத் தேவி ... ... ... 35
17. கண்டிவாழ் நண்பருக்கு நிருபம் ... 37

## காட்சிகள்

18. இயற்கையும் தனிமையும் ... ... 41
19. இயற்கையின் கொடுமை ... ... 43
20. மனதிலுறை காட்சிகள் ... ... 46
21. இலங்கைக் காட்சிகள் ... ... 48
22. இலங்கை வனக் காட்சிகள் ... ... 51
23. முகில் ... ... ... ... 53
24. உழவுப் பாட்டு ... ... ... 55
25. சூரிய வணக்கம் ... ... ... 57
26. ஏழையின் பிரார்த்தனை ... ... 59

## பாலர் கீதம்

27. பெற்றோர் வணக்கம் ... ... ... 65
28. அம்புலி வா ... ... ... 66
29. நல்ல பாப்பா ... ... ... 67
30. ஆட்டுக்குட்டி ... ... ... 68
31. எனது பட்டம் ... ... ... 69
32. சின்ன வீரன் ... ... ... 70
33. பூக்கள் ... ... ... ... 72
34. பூக்கள் பறிப்போம் ... ... ... 73
35. பாலர் பூஜை ... ... ... 74
36. ஜீவ இரக்கம் ... ... ... 75
37. கூண்டுக் கிளி ... ... ... 76
38. ஆகாய விமானம் ... ... ... 77
39. ஒளிரும் விண்மீன் ... ... ... 78
40. கருணைச் செயல் ... ... ... 80
41. காலைப்பொழுது ... ... ... 81
42. பாப்பா ... ... ... ... 82
43. கடவுள் வணக்கம் ... ... ... 84
44. தீப வணக்கம் ... ... ... 85

## நீதி

45. வெள்ளை மலர் ... ... ... 89
46. வயோதிபன் ... ... ... 91
47. கண் கண்ட தெய்வம் ... ... 93

## கண்ணன்

48. இகத்தினொளி ... ... ... 99
49. கார்கால மதி ... ... ... 101
50. மாயக்கள்வன் ... ... ... 103
51. கண்ணம்மா ... ... ... 105
52. கண்ணன் அருட்பத்து ... ... 107

## இதயத் துடிப்பு

53. மரமும் பூங்கொடியும் ... ... 113
54. அவளும் நானும் ... ... ... 114
55. ஜெகத்திலென் தெய்வம் ... ... 116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பராசக்தியின்

# அருள் வேட்டல்

அன்னைநீ யென்னை யுன்றன்
    அருமடி தன்னில் வைத்துப்
பன்னுசீர்ப் பாட லெல்லாம்
    பரிவுட னெனக்கு மீவாய்
கன்னிநீ யென்று மென்றே
    கருதிட மறைகள் செப்பும்
உன்னியே யதனை நோக்கின்
    ஒப்பில்லை யென்றன் தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனுன் தாளைப் பற்றிக்
கவிகளுக் கரச னானான்
நம்பியுன் பாதம் பற்றிப்
பாரதி பாடல் கண்டான்
செம்பதந் தன்னைப் பற்றிப்
பாவலர் பல்லோ ரானார்
அம்புவி மீதில் யானும்
அன்னையுன் அருளைக் கொண்டேன்!

அன்னையே யென்று கூவ
அசதியா யுறக்கங் கொள்ளும்
வன்மைசேர் மாதா விங்கு
வையகந் தன்னி லில்லை
உன்னையே நம்பி நானும்
ஒண்கவி விழைவு கொண்டேன்
அன்னையே நீதான் வந்துன்
அருந்தமி ழெனக்கு மீவாய்!

காற்றினில் மலரில் வானில்
களித்திடும் பொய்கை தன்னில்
ஆற்றினில் உயர்வு பள்ளம்
அழகிய கூட்ட மெங்கும்
தோற்றியுன் சிறப்புக் காட்டிச்
சுருதிசேர் பாட லீவாய்
போற்றியுன் னடியைக் கொண்டேன்
புலவனா யென்னை வைப்பாய்!



எண்ணமே வந்து தோற்ற
இதயமு மதனிற் சேரப்
பண்ணிறை பாட லெல்லாம்
பாரினிற் பாடல் வேண்டும்
உண்மையா முன்றன் அன்பை
உவந்தெனக் கருள்வை யாயின்
விண்ணவர் வாழ்வு யானும்
விதிப்பனிப் புவியின் மீதே!


அன்றொரு நாளிற் தாயென்
றடிமுதற் கொண்ட சீர்தான்
இன்றெனக் கருளுங் கூட்ட
இகத்தினி லின்பங் கண்டேன்;
நன்றுநீ யன்று வந்தென்
நாவினி லுறைந்தா யன்னே!
ஒன்றியே நிற்பாய் நாளும்
உன்னருள் விளைவு கண்டேன்!

பற்பல தோற்றங் காட்டிப்
பாரினை வளர்ப்பா யன்னே!
நற்பயன் விழைவோர் தம்மின்
நாயகி நீயு மாவாய்;
பொற்பதந் தன்னைக்கொண்டேன்
புலமையில் விழைவு கொண்டேன்
உற்பவ மெல்லாம் போக்கி
உய்ந்திட வைப்பாய் தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையே வந்து வாட்டும்
இடர்களும் பயமும் நீக்கி
உன்னையே போற்றுஞ் சீரும்
ஒப்பிலாத் திறனு மீவாய்;
மன்னவ னெனவே யாளும்
மகிதலங் கவியா லாள்வேன்
சென்னியி லுன்னை வைத்துத்
தினமுமே போற்றி வாழ்வேன்.

அன்னையே! உன்னை நாடும்
அடியனைக் கடைக்கண் நோக்கிப்
பொன்னொடு புகழும் நல்ல
பொய்யிலா வாழ்வு மீவாய்
உன்னருந் தாளே யன்றி
உலகினிற் சுவர்க்கம் வேண்டேன்
கன்னலே! கலைஞர் போற்றும்
கற்பகத் தருவே! வாழ்வே!



# சக்தியின் இருப்பிடம்


பெண்ணுயர் வதனந் தன்னில்
பிரமனின் நாவு தன்னில்
எண்ணினி லடங்கா இன்பம்
ஏந்திய மழலை தன்னில்
கண்ணிய மக்கள் காட்டும்
கருணைசே ரிதயந் தன்னில்
பண்ணிறை பாட லோதும்
பக்தரின் குழாங்கள் தன்னில்

வீணையின் நரம்பி னோடும்
மேவிடும் விரல்கள் தன்னில்
பாணியின் சேர்க்கை யோடும்
பாடுவார் பதங்கள் தன்னில்
ஆணையின் மீறு வீரர்
அமரொளிர் புயங்கள் தன்னில்
தூணிறை சிற்பங் கொத்தும்
சுத்தநல் வித்தை தன்னில்

கவிஞனின் கனவு தன்னில்
கற்பனை யுள்ளந் தன்னில்
புவியினிற் பொருந்தக் காட்டும்
பொருளுறை பாடல் தன்னில்
அவனியி லறிஞர் கூறும்
அரும்பத வுரைகள் தன்னில்
நவரசஞ் சொட்ட நன்கு
நடிப்பவன் நடனந் தன்னில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகினைச் சொட்டும் பூக்கள்
ஆடியே திரியும் மஞ்ஞை
எழிலுறு திங்கள் வானம்
எழுந்திடும் பரிதிச் சோதி
மழைமுகிற் படியுங் குன்றம்
மாநில நதிக ளெங்கும்
விழைவுறு சக்தி யன்னை
வீற்றிருந் தரசு செய்வாள்.



# மாலைக்கு மாலை

உன்னரும் வதனங் காண
ஓடிவந் துற்ற காலை
மென்மைசேர் காந்தட் கையால்
விரும்பிநீ சேர்த்த பூவை
நன்மைசேர் தொடைய லாக்கி
நயமுற வெனக்குத் தந்தாய்
மன்னுசீ ரன்புக் கீடாய்
மைவிழி! ஒன்றுங் காணேன்.

சிறியதோர் மாலை யோடு
சீர்நிறை அன்புஞ் சேர்த்து
நறியவா சனைதான் வீச
நங்கைநீ நயமோ டீந்தாய்
மறைபுகழ் அன்னை தாளில்
மற்றும்யா னதனைச் சூட்டி
நிறைவுவாழ் வுனக்குச் சேர
நித்தமும் வேண்டி நிற்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிறை பாடல் மாலை
பரிந்துனக் காகக் கட்டிக்
கண்ணயர் படுக்கை மீண்டுங்
கடிதினி லுற்ற போழ்து
வெண்ணிறப் பூக்க ளிங்கு
விரிந்துவா சனைதான் வீசி
உண்மைசே ருள்ளத் தன்பை
உன் எழில் போலக் காட்டும்.

மாலைக்கு மாலை தந்தேன்
வையத்தி லின்பங் கண்டேன்
ஓலைக்கும் நல்ல பாடல்
உன்னருள் தன்னாற் பெற்றேன்
வேலைக்கும் மேலாய்ப் பொங்கும்
விரிந்தவுன் அன்புக் கீடாய்
ஞாலத்திம் மாலை தன்னை
நங்கைநீ நாளு மேற்பாய்.

வெண்ணிறப் பூவே யென்ன
விளங்குமுன் னுள்ளந் தன்னில்
தண்ணருள் சுரக்கு மன்னை
சார்ந்துநல் லின்பம் பெய்க
உண்மையன் பின்றி வாழும்
உலுத்தர்நம் போல்வா ருள்ளம்
மண்ணகம் நெகிழ்வு பெற்று
வளர்வதும் அன்பா லன்றோ!

## மொழி


## தமிழ் வணக்கம்

உலகினி லாதி யைந்தா
யோங்கிய மொழியி லொன்றாய்
நிலையது பெற்றே வாழ
நீள்சடைப் பிரானார் தந்த
மலைமுனி வளர்த்த பாவாம்!
மன்னரின் மணியே யாவாய்!
கலைபல வருளி யென்றன்
கவியுளஞ் சுரக்க வைப்பாய்!

ஆதியைந்தா யோங்கிய மொழிகள்: தமிழ், சமஸ்கிருதம் லத்தீன், ஹீப்ரு, கிரீக் என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பொதியமலை தனில்வளரும் இளமானே வருக
புலவர்தமின் மனதிலுறை பூங்குழலாய் வருக
முதியதொரு முனிவன்வளர் புத்திரியே வருக
மூவுலகும் மகிழுமொரு பண்ணிசையாய் வருக.
புதியதொரு தொடைசூட்டி நின்புகழை யேத்தப்
பொருளெலாந் தந்திடுமென் புண்ணியமே வருக
மதிமுகமுஞ் சிலம்பொலியுங் குறுநடையுங் காட்டி
மாண்புடைய தமிழ்மகளே! மடிமீது வருக!

பிறைதாங்கும் பரமனருள் சிறுகன்னி வருக
பீடத்தில் அமர்ந்தருளும் பெருமாட்டி வருக
முறையிட்டுத் துதிபாட முன்னிற்பாய் வருக
மூவேந்தர் முடிசூட்டும் பெண்ணரசே வருக
சிறியதொரு தொடைசூட்டி நின்புகழை யேத்தச்
சீரெல்லாந் தந்திடுமென் அன்னையே வருக
மறைபாடும் அந்தணர்கள் மனமார வாழ்த்த
மாட்சியுறு தமிழ்மகளே மடிமீது வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிசைக்கும் பாவலர்தம் பெருநிதியே வருக
பார்முழுதும் பரவிவரும் பைந்தொடியே வருக
விண்ணிலொளிர் தண்மதியின் விளைபொருளே வருக
வீங்குகடல் தோற்கடிக்கும் வளமுடையாய்வருக
கண்குளிரத் தொடைசூட்டிக் காசினியி லேந்திக்
காலமெலாங் களித்திடவென் காரிகையே வருக
தண்ணெனவுன் சிலம்பொலிக்க வண்ணநடை நடந்து
தலத்திலுயர் தமிழ்மகளே மடிமீது வருக!

முக்கனியின் சுவைகடியும் முத்தமிழாய் வருக
மூதாட்டி தாலாட்டும் சிறுமதலாய் வருக
பத்திமிகு சம்பந்தன் தமிழ்மறையே வருக
பாரதியின் பண்ணொலிக்கும் பசுங்கிள்ளாய் வருக
தக்கதொரு தொடைசூட்டித் தரணிதனில் மகிழத்
தமியேனுக் கருள்புரியுந் தவக்கொழுந்தாய் வருக
இங்கணமே பதமெடுத்துப் புன்னகையும் பூப்ப
என்மடியில் தமிழ்மகளே விரைந்தோடி வருக!

இளங்கோவன் சிலம்பொலிக்கும் என்னன்பே வருக
எத்துமொரு நாவலனின் சொற்பெருக்கே வருக
வள்ளுவனின் மறைவிளங்கும் வளமுடையாய் வருக
மாணிக்க வாசகனின் தேனூற்றே வருக
கள்ளுநிறை மலர்கொண்ட கமழ்தொடையான் சூட்டக்
கன்னியே! கண்மணியே! என்முன்னே வருக
துள்ளுமொரு பதமெடுத்துத் தொடரசைய நடந்து
சுந்தரியே! தமிழ்மகளே! மடிமீதில் அமர்க!

## இளந்தமிழன் இதயம்

காசு பொருளெனக்கு
வேண்டியதில்லை—இந்தக்
காசினி யாள்கையும்
வேண்டியதில்லை
வீசு புகழெனக்கு
வேண்டியதில்லை—உயர்
வெற்றி மாலைகளும்
வேண்டியதில்லை.

தேசம் விடுதலையை
வேண்டிநிற்பேன்—என்
தீரம் காட்டியுநல்
திறல்விளைப்பேன்
பாசம் பற்றிடவே
பாட்டமைப்பேன்—அதைப்
படிக்கின்ற போதிலங்கம்
பதறவைப்பேன்.

உண்ணச் சுவையமுதம்
வேண்டியதில்லை—தேன்
ஊற்றும் பழங்களுந் தான்
வேண்டியதில்லை
வண்ணப் பொருளெதுவும்
வேண்டியதில்லை—பெற
வழக்குக ளாடிநாளும்
வாடுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னித் தமிழவளை
வேண்டிநிற்பேன்—அவள்
கனியுஞ் சுவையமுதை
உண்டுகளிப்பேன்
சொன்ன துறையனைத்துந்
தோய்ந்து வருவேன்—அங்கு
சூழும் பொருளனைத்துங்
கொண்டுவருவேன்.

ஏறும் பரியெனக்கு
வேண்டியதில்லை—அன்றி
எழிலுறு பல்லக்குந்தான்
வேண்டியதில்லை
வீறும் இறுமாப்பும்
வேண்டியதில்லை—கணம்
மின்னி யழிவனவும்
வேண்டியதில்லை.

நாறும் மலர்க்கொன்றை
அணிந்திடுவான்—அவன்
நல்ல அருட்பொழிவை
வேண்டியு நிற்பேன்
ஊறும் அவனருளும்
அணைந்திடவே—என்னை
ஒடுக்கவரு காலனையும்
வென்றிடுவேன்.



பட்டும் பரிமளமும்
வேண்டியதில்லை—இங்கு
பகட்டும் பொருளெதுவும்
வேண்டியதில்லை
கட்டுங் காவலுந்தான்
வேண்டியதில்லை—புவி
களிக்குங் காட்சிகளும்
வேண்டியதில்லை.

சொட்டும் அழகுமலர்
வேண்டுமேயடா—அதைச்
சூட்டும் பெண்ணொருத்தி
வேண்டுமேயடா
மெட்டும் பாடல்களும்
ஈகுவாளடா—அதை
மேதினியிற் கொட்டிநானும்
வாழுவேனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழா! தூக்கங் கலைந்திடுவாய்

தமிழா! தூக்கங் கலைந்திடுவாய்
தாழ்வு போக்க எழுந்திடுவாய்
அமிழ்தம் நமது மொழியாகும்
அறிந்து நீயும் உய்தியடா!

கூத்தன் அருளிய தமிழிதுவே
குவலயம் முதிர்ந்த மொழியேகாண்
சாத்தன் தலையைத் தினங்குத்திச்
சகத்தில் வளர்த்த பாஷையடா.

அள்ள அள்ளப் பொருள்குறையா
அரிய பெரிய தமிழ்நூல்கள்
உள்ளங் கொள்ளை கொண்டிடவே
உனக்கு வைத்த புதையலடா.

வள்ளுவ னருளிய குறளிதுவே
வானம் உய்க்கும் மறையேகாண்
தெள்ளிய தேறற் பாகேயடா
திரள உருட்டிய நீதியடா.

கம்பன் அளித்த காவியமே
கருத்தை யள்ளுஞ் சித்திரமாம்
உம்பர் வானம் ஒப்பில்லை
உண்மை யிதுவென் றறிவையடா.




சேரன் தம்பியின் சிலம்பிதுவே
செகத்திற் சிறந்த ஆரமடா
பாரில் இதனைப் படித்திடுவாய்
பழைய பெருமை ஒலிக்குமடா.

மன்னர் வளர்த்த மகளேகாண்
மாநிலம் போற்றுந் தமிழிவளே
தின்னத் தெவிட்டாத் தேனேகாண்
தேடக் கிடையாச் செல்வமடா.

வீரம் நிறைந்த முன்னோர்கள்
வித்தை பலவுங் கற்றோர்கள்
பாரை யாண்ட மன்னவர்கள்
பலரின் அம்சம் நீயுமடா.

நாட்டின் பணியை நினைவூட்டி
நன்மகன் றனக்கு வாள்கொடுத்து
வாட்ட மின்றிக் களம்விடுத்த
வனிதையர் தோன்றல் நீயுமடா.

(தமிழா)



# வீரத் தமிழா! எழுந்திடுவாய்

வீரத் தமிழா எழுந்திடுவாய்
வெற்றிச் சங்கம் முழக்கிடுவாய்
சோர்வு போக்கித் தள்ளியும்நீ
சுவர்க்க வாழ்வு கொணர்ந்திடுவாய்.

பாரதி கண்ட கனவெல்லாம்
பாரினி லின்று பலித்திடவே
வீரா உன்றன் உழைப்பாலே
வேண்டிய சாத்திரஞ் சேர்த்திடுவாய்.

கமழும் நல்ல காவியங்கள்
காட்சி நிறைபே ரோவியங்கள்
குழியிற் புதையா வகைகண்டு
குவலயம் போற்ற வைத்திடுவாய்.

பெண்ணைப் போற்றி வளர்த்திடுவாய்
பெரிய கல்வி அளித்திடுவாய்
மண்ணைச் செழிக்க வைத்திடுவாய்
மகிழ்வை யெங்கும் விளைத்திடுவாய்.

நாட்டது விடுதலை நாட்டிடுவாய்
நன்மொழி தன்னைப் போற்றிடுவாய்
பாட்டொடு தாளஞ் சேர்ந்திடவே
பற்பல ஆட்டம் பயின்றிடுவாய்.


தமிழ்த்திரு நாடுன் தாயேகாண்
தாழ்வொடு தினமும் பணிவாயே
கமழ்தரு மலர்கள் பதஞ்சூட்டி
கணமும் அவளைத் துதித்திடுவாய்.

உனது பணிகள் பலவுண்டு
ஊக்கம் பொங்க உழைத்திடுவாய்
தனது நலத்தைப் பாராமல்
தாரணி போற்ற வாழ்ந்திடுவாய்.

வீரம் பொங்க விளங்கிடுவாய்
வெற்றி யெங்கும் விளைத்திடுவாய்
தூரங் குறுகக் கண்டிடுவாய்
துரித முறுமுன் உழைப்பாலே.

இன்றே தொடங்கி உழைப்பையடா
ஏறு போல்நீ நடப்பையடா
நன்றே கூடி நாமெல்லாம்
நாளும் உன்னைத் துதிப்பமடா!

(வீரத்தமிழா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து



நாட்டுக்கோர் நல்ல வாழ்த்து
நன்மகன் தனக்கும் வாழ்த்து
பாட்டுக்கோர் பதஞ்சேர் வாழ்த்து
பாவையர் தமக்கும் வாழ்த்து
கூட்டமாந் தொழிற்கும் வாழ்த்து
குவலய மணமுஞ் சேர்த்தென்
ஏட்டினிற் காணும் வாழ்த்தை
இகத்தினீர் காணு மேற்பீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் இனிது வாழி



சிறையினில் தவங்கள் தாங்கிச்
    சீரிய வாழ்வுந் தாங்கிப்
பொறைமிகு மனது மைந்தர்
    புரிந்தநற் றியாகந் தன்னால்
கறைதருந் தளைக ளின்று
    கடிதினி லுடையக் கண்டோம்
மறைபுகழ் அன்னை நீடு
    மாண்புற வாழி! வாழி!


பட்டங்கள் துறந்து நின்றார்
    பார்புகழ் அஹிம்சை தன்னால்
வெட்டியுன் தளையை வீழ்த்தி
    விடுதலை வகுத்தும் வைத்தார்;
இட்டநற் தெய்வ மென்றுன்
    இணையடி யேத்தி நின்றார்
பட்டுள துன்பம் மாறப்
    பாரதம் வாழி! வாழி!

சுதந்திர கடாட்சம் பொங்கத்
    துன்பங்க ளகன்று மாயப்
பதந்தமைப் பற்றி நிற்கும்
    பாரிய விலங்கும் வீழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதந்தரு மன்னே யுன்றன்
இன்னடி யமர்ந்து மக்கள்
கரந்தனைக் கூப்பியேத்தக்
களிப்புட னூழி வாழி!

வேதங்கள் துலங்க நல்ல
விதைகள் துலங்க வையம்
போதங்கள் துலங்க வுன்றன்
பொன்முடி துலங்க நாட்டில்
நாதங்கள் துலங்க மைந்தர்
நல்லிசை துலங்க நாளும்
ஏதமில் வாழ்வு பெற்றே
பாரத மினிது வாழி!





## ஜவகர் வாழிய

மன்னாதி மன்னனென
மன்னவரும் உனேவணங்க
மகிதலத்தில் முடிசூடா
மன்னவனுய் நீதிகழ்ந்து
பொன்னுறும் உயர்மலையும்
புள்ளொலிக்கும் பொழில்பலவும்
பொருந்துமுயர் பாரதத்தின்
சுதந்திரத்தை நிலைநாட்டி
மின்னுறும் இடைநலியக்
கரமுறுத்தும் பெருவிலங்கை
வெட்டியவெம் பெருமானே!
வீரமுயர் கேசரியே!

பன்னாளிப் புவிதனில்நீ
படிபுரந்து வாழியவே!
பாரதத்தின் புத்திரனே!
பலகாலம் வாழியவே!

சிறைதனிலே உனைவாட்டித்
தேசமுயர் பக்தியினைச்
சிதைத்திடவிங் கெண்ணமுறும்
பேடியர்கள் தலைசாய்க்கப்
பொறையினொடும் சிறைதனில்நீ
புரிந்தவுயர் தவமதனால்
பொலபொலெனத் தாய்தளைகள்
பொடிப்பொடியாய்ப் போயினகாண்
மறைபுகழும் அன்னையவள்
மடிதனில்நீ இனிதமர்ந்து
மன்னவரும் உனைவணங்க
மாற்றலருந் தொழுதேத்த
இறையெனவே பாரதத்தை
இன்பமுறக் காத்திடுவாய்
எத்திசையும் புகழ்பரக்க
எங்கோவே! வாழியவே!

உன்னருமைத் தந்தையரும்
உத்தமிநன் மனையாளும்
ஓங்குபுகழ் படைத்தவுன
தருமைமிக்க சோதரியும்
இன்னுமுயர் சுற்றமெலாம்
இந்தியநன் நாட்டினுக்காய்



இளைப்பின்றி உழைத்துழைத்தே
எங்கணும்டா ணெனவொலிக்கும்
மன்னுபுகழ்ச் சுதந்திரத்தின்
மணியோசை எழுப்பினரால்
மாற்றலரும் அதிர்ச்சியுற்றே
மறக்கொள்கை விடுத்தனர்காண்
தன்னிகரில் எங்கோவே!
தவத்தில்விளை பெரும்பேறே!
தமரினொடும் பன்னெடுநாள்
வாழியநீ வாழியவே!

நாட்டினுறு துயர்நீக்கி
நலிவுகளை விரைந்தோட்டி
நலங்கமழுஞ் சுதந்திரத்தின்
நன்மைகளை நிலைநாட்டி
வாட்டமுறும் இந்தியர்தம்
வருத்தமதை மன்னவனாய்
வகுத்திடுநல் நெறிகளினால்
ஒருகணத்திற் புறங்காட்டி
ஏட்டினிலு மியம்பவொணா
இன்பமெலாம் நீயூட்டி
இந்திரனாய் இப்புவியில்
இந்திரனும் வெள்கிடவே
ஆட்சிதனைப் புரிந்திடுவாய்
அமரரென யாம்வாழ்வோம்
அண்ணலுயர் ஜவகர்நீ
அருந்தவமே! வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவை எழுத்தாளர் மகாநாடு வாழ்த்துப்பா


தரணியிற் சிறந்த பேருந்
தமிழினை வளர்க்க வேண்டி
உரைமிகு கோவை தன்னில்
ஒன்றியே கூடி நின்று
விரைவினால் வழிகள் தேடும்
விழுமிய பெரியோர் நும்மைத்
திரையெறி கடலுக் கிப்பால்
இருந்துயாம் வாழ்த்து கின்றோம்.

கதைகள்நன் கெழுது வோரும்
கவிதைகள் புனைகு வோரும்
பதைபதைத் துணர்ச்சி பொங்கப்
பாரினி லுரைசெய் வோரும்
சதமுமே யுழைத்து நல்ல
சாத்திரம் வளர்க்கும் பேரும்
நிதமுந்தம் பேனை சோராப்
பத்திரா திபருங் கேண்மோ!

நும்மருந் தொண்டி னாலே
நூல்பல பெருகல் வேண்டும்
நம்மரு மொழிதா னெங்கும்
நல்லொளி வீசல் வேண்டும்
அம்மையே யாகு மெங்கள்
அருந்தமிழ்க் கலைக்கு நீவிர்
உம்பெருந் திறனைக் காட்டி
உலகெலாம் போற்ற வைப்பீர்.



பாரதி யன்று கண்ட
பகற்கனா நனவே யாகச்
சாரமே மிகுந்த நல்ல
சாத்திரம் பலவுந் தேடி
வாரிதா னென்ன நீவிர்
வையத்தில் வழங்க வைப்பீர்
ஊரெலா மும்மைப் போற்ற
உழைத்துமே வாழ்க! வாழ்க!!




## தொழிலாளர் மாண்பு

பார்சிறக்கும் படைசிறக்கும்
பாவலர்தம் தேனினிய
சீர்சிறக்கும் இருசிறக்கும்
திருக்கோயில் பலசிறக்கும்
கார்வளர்க்கும் புவிதனிலே
கனகமணிப் பொருள்சிறக்கும்
ஊர்சிறக்க ஒலிபெருக்கும்
உளியாள்வோர் திறத்தாலே.


ஏராள்வோர் வினைசிறக்கும்
எழில்பெறுநல் மனைசிறக்கும்
சீராளர் தொழிலதனல்
சிற்பமெனும் இவைசிறக்கும்
பாராள்வோர் முடிசிறக்கும்
படியிலவர் குடிசிறக்கும்
நீராளும் மரக்கலங்கள்
நெடுங்கடலில் நிரைசிறக்கும்.

புவியிலுயர் கொடிபறக்கும்
பூபாலர் தம்முடைய
நவிலினிய மனைகளையும்
நற்கோட்டை நலன்களையும்
அவனிதனி லளிப்பவர்கள்
அருந்தொழிலோ ரவரின்றி
நவமணிசேர் முடிசிறக்கா
நாற்படையுந் தாம்நடக்கா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளைமொழிப் பெண்களணி
    கிங்கிணியும் காதணியும்
துள்ளிவரு குதலையுறு
    தொட்டில்களும் கட்டில்களும்
பள்ளிசெலுஞ் சிறுவர்விழை
    பலவகையாம் பொருட்களையும்
அள்ளியள்ளி அளிப்பவைகள்
    அருந்தொழிலோர் உயர்கரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவளர் புகழும் நல்ல
    சீரெலாம் வந்து கூடப்
பரமனின் கருணை யோடு
    பார்வதி யருளுஞ் சேர
விரைமண மாலை சூட்டி
    விளங்குதம் பதிகள் வாழ்க!
கரையிலாக் கால மின்பங்
    கண்டுநல் வாழ்வு வாழ்க!

மங்கல முழக்கம் பொங்க
    மகிதலம் மகிழ்வு பொங்க
இங்குயர் வதுவை கொள்ளும்
    எழிலுறு நலத்தான் மிக்க
நங்கையும் நம்பி நீயும்
    நானிலம் நீடு வாழ்க!
பொங்குயர் மணியாம் மக்கள்
    பொருந்தநீர் வாழ்க! வாழ்க!!



## புதுமைப பெ...

வாழிநீ வாழி! பல்லாண் டிங்கே
வையகந் தழைத்திட வருத்தமஃ தகல
ஏழைகள் வீட்டில் இரப்பவர் குடிசையில்
இருநிதி படைத்த செல்வர்தம் மனையில்
ஆழி செலுத்தியே அரிவைநீ வாழி!
அனைவருஞ் சமமென அகத்திற் கொள்ளுதி
ஊழிய காலம் உன்னர சோங்க
உத்தம மகளே! உலகிடை வாழி!

சீதையி னம்சமே! திரௌபதி யம்சமே!
திறன்மிகு நமனைத் திகைத்திட வைத்த
சோதியாஞ் சாவித் திரியவ ளம்சமே!
சுடரென வொளிரும் தோகைய ரம்சமே!
பேதைகள் பெண்ணெனப் பிழைபடச் செப்பும்
பெருமிதம் பிடித்தவர் சிரமதைத் தாழ்த்திட
ஆதியாய் நிற்கும் அன்னையி னம்சமே!
அவனியி லறிவொளி பரப்பிநீ வாழி!


மாதர்தம் அறங்கள் வையத்தி லோங்கிட
மடமையும் மற்றுள தாழ்வெலா மகன்றிட
வேதத்தி லுள்ளன விதியெலா மோம்பியே
வெறுப்பவர் தஞ்சிரந் தாழ்ந்துனை வணங்கிடச்
சாதத்தி னோடு தருமமும் வாழ்வும்
சார்ந்துள தெய்வச் சாதியும் படைத்துநீ
பாதத்தி லசைவுறு கிங்கிணி யார்ப்பப்
பாவையே பாரினைப் புரந்துநீ வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்தம் செல்வியே! புத்தொளி விளக்கமே!
புவியினிற் பாரதி போற்றுயர் நங்கையே!
இலரிவர் உளரிவர் என்பன மாற
யாவரு மிகத்தில் இந்திர ராக
நிலமதிற் செம்மை அறங்களை வளர்த்து நீ
நீணிலந் தன்னில் நின்னர சாண்டு
அலகிலா ஜோதியாய் அமரராய் அனைவரும்
அவனியி லொளிர்ந்திட அணங்கனை வாழி!

போற்றி போற்றி பொன்னடி போற்றி
புதுப்புது வாழ்வினை வகுப்பனை போற்றி
தூற்றிடும் வாழ்வும் தூசியாய்ப் பறந்திடச்
சுவர்க்கமும் போகமுந் துன்னியே சேர்ந்திடக்
காற்றினில் மலரினில் களித்திடு பொய்கையில்
கனவினில் நனவினில் கவினொளி வீசி
நாற்றிசை புகழ்ந்திடு நங்கைநீ வாழி!
நான்முகன் படைப்பின் நற்பயன் வாழி!



# கவிதைத் தேவி

வாழ்க! கவிதையாம் என்னருந் தேவி!
உன்னோ டொன்றிய நாளது முதலாய்
எண்ணம் வேறுதா னெதுவு மின்றி
இகமதில் நானும் இன்புற வாழ்வேன்
பொன்னுல கின்பம் புவியில் விளைப்பாய்
புத்தொளி யெனக்கு நித்தமு மீவாய்
கண்ணா லிதுவரை காணாக் காட்சி
மண்ணில் விண்ணில் மலரக் காண்பேன்
கானப் பறவையின் கனிவுறு கானமும்
காற்று மரத்திடை காட்டு மிசையும்
நீலக் கடலின் நெடுந்திரை யொலியும்
நிரையது காப்போர் நிருத்தப் பண்ணும்
சேலைப் பழிக்கும் செவ்வரி விழியார்
காவுறை குயிலைக் கலக்கி யோட்டும்
கோட்டம் நிறைந்த குரவைப் பாடலும்
சாலையிற் சகடந் தானது செலுத்தும்
சாரதி யிசைக்குந் தமிழிசைப் பண்ணும்
உள்ளந் தன்னைக் கொள்ளை கொள்ள
நீயுமே யென்னை நின்னுட னிட்டுத்
தங்குபல் லின்பந் தரணியிற் காட்டித்
துன்பம் மறக்கத் துணைவியா யமைந்து
நன்கு பாடவே நாட்டந் தந்தாய்.

அதா அன்று

விண்ணிற் றிகழும் விரிந்த கதிரும்
வியக்குந் திங்களும் மயக்கும் மீனமும்
பண்ணது பாடும் பாவையர் கூட்டும்
பரமனை யேத்தும் பக்தர் குழுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்மை வீசும் தருநிறை காவும்
தரணியிற் றவழும் உயர்மலை நதியும்
செக்கர் வானம் சேர்க்கும் வண்ணமும்
தினமுங் கண்டுளந் திளைக்க வைத்தாய்
சிறப்புட னென்னைச் செப்பவும் வைத்தாய்.

முன்னை நாள்


பண்ணிற் சிறந்த பாரதி பாட்டிலும்
பக்தி சொட்டும் பனுவற் பண்ணிலும்
சேரன் தம்பியின் சிலம்ப தார்ப்பிலும்
சித்திரம் நிறைந்த கம்பன் கவியிலும்
கின்னது பேரெழில் நிறைவைக் காட்டி
என்றன திளமை யிதயங் கவர்ந்தாய்.
அந்நாள் முதலா யலைந்தே யானும்
பேரெழில் தன்னில் பெரிதே மயங்கி
ஊணினை வெறுத்தும் உறக்கந் துறந்தும்
ஊரெலா மலைந்தும் ஒருபயன் பெறாது
நின்னுடை யருள்தா னென்னைக் கிட்டும்
என்னு மெண்ணங் கனவே யென்றுதா
னேங்கியே திரியு மென்னையும் நாடி
அமரனே யாக்க அவனியி லணைந்தாய்
இந்நாள் முதலா யென்னுடன் நிலைத்தே
நின்றன தின்பம் நிதமுந் தருவாய்
நின்னைப் போற்ற வென்னையும் வைப்பாய்
நின்றன தருளே நிறைதல் வேண்டும்
நிலத்தில் நானும் நிலைபெறல் வேண்டும்
பண்ணது பொங்கப் பாடவும் வேண்டும்
பாவலர் போற்றும் "பா"வெனுந் தேவி!

---

## கண்டிவாழ் நண்பருக்கு நிருபம்

தலத்துயர் தெய்வ மான
முருகனின் தயவி னாலே
நிலத்தினில் மாண்பு மிக்க
கண்டிமா நகரில் வாழும்
நலத்துயர் தம்பி கேண்மோ!
நடராஜ வள்ளல் கேண்மோ!
சலித்தலின் றுழைக்குஞ் செம்மல்
தானுமிங் கினிது கேண்மோ!

கூவிடும் வண்டி யேறிக்
குளிர்மைசேர் குன்றந் தாண்டித்
தாவிடும் மந்தி காணும்
தருநிறை வனமும் தாண்டி
ஓடிடும் 'மோட்டா' ரேறி
ஊரினில் வந்து சேர்ந்தேன்
ஈடிலா வும்ம தன்பை
என்றும்நான் மறக்க மாட்டேன்.



## காட்சிகள்




அழகினைச் சொட்டும் பூக்கள்
ஆடியே திரியும் மஞ்ஞை
எழிலுறு திங்கள் வானம்
எழுந்திடும் பரிதிச் சோதி
மழைமுகிற் படியுங் குன்றம்
மாநில நதிக ளெங்கும்
விழைவுறு சக்தி யன்னை
வீற்றிருந் தரசு செய்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வண்டினங் கீதம் பாடி
　　மலர்களில் மதுவை யுண்டு
தெண்டிரை வாரி யொப்பச்
　　சேர்ந்துநின் றதிருஞ் சோலை
கொண்டல்கள் குலவிக் கூடிக்
　　குதித்துநின் றுருளுங் குன்றம்
வெண்டரைப் பரப்பில் ஞண்டு
　　விரைவுட னுலவும் நெய்தல்

வேலையின் முகட்டில் பானு
　　விரிந்ததன் கதிரைக் கூட்டிக்
கோலஞ்செய் செம்மை நீட்டுங்
　　குறுகிய மாலைக் காலம்
பால்நிலாப் பொழியுந் திங்கள்
　　படர்ந்துயர் வானிற் போந்து
ஞாலத்தை மோன மாக்கி
　　நல்லிருள் கடியும் வேளை

வெண்மணற் பரப்பின் மீது
　　விரைந்துகா னமரும் நேரம்
தண்சுனை நதிகள் சேர்ந்து
　　தரணியிற் றவழுங் கானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மயில் களிக்க நின்று
பெருமயில் நடஞ்செய் தானம்
கண்ணிமைப் பொழுதில் மாறக்
கார்முகில் நீட்டுங் கோலம்

நான் தனித் தின்பங் காணேன்
நங்கைநீ பக்க லின்றி
வானமும் வறுமை யாகும்
வளர்மதி வெறுமை யாகும்
மோனத்தை விழையும் நெஞ்சம்
மோதுமுன் னன்பை நாடும்
கானமுங் களிப்பை யூட்டா
கருத்தினி லுவகை தோற்றா.

மயிற்குழாம் நடஞ்செய் சோலை
மதியத்தால் நிரம்பும் வானம்
செயற்கையால் வையம் மாறி
விண்ணெனத் திகழும் நேரம்
வயற்கரை மண்டுங் காட்சி
வாரியி னினிய கீதம்
இயற்கைக ளுன்றன் சேர்க்கை
என்னுளம் விழையச் செய்யும்.



## இயற்கையின் கொடுமை

காலையிலென் மாமரத்தில்—ஒரு
கருங்குயில்தான் வந்தமர்ந்து
சோலையெலா மெதிரொலிக்க—மிகச்
சுருதியுடன் பண்ணிசைக்க

திடுக்குற்றே விழித்தெழுந்து—என்
தீங்கனியாள் குரலெனவே
அடுத்துவளர் சோலையிடை—நான்
அக்கணமே விரைந்தோடி

ஏமாற்றம் நானடைந்தேன்—என்
இதயமுமே மிகவிடிந்தேன்
தேனூற்றும் சோலையிடை—தனித்
திகைப்புடனே தானிருந்தேன்

அழகுறவே அசைந்தாடி—அங்கு
அடியெடுத்து நடைபயிலும்
எழில்நிறைந்த வெண்ணன்னம்—என்
ஏந்திழையை நினைவூட்டும்

துள்ளுமொரு மானினத்தின்—இரு
சுழல்விழிகள் தனைநோக்கின்
கொள்ளையுளம் கொண்டுவிடும்—என்
கோதையவள் விழிநிகர்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கையினில் மலருகின்ற—புதுப்
பூக்களது செவ்விதழ்கள்
மைவிழியா ளெனைமயக்கும்—நிறை
வதனமொளிர் இதழ்காட்டும்

அந்தியினில் வெடிக்கின்ற—வெண்
அழகுசொரி முல்லைமுகை
சிந்தையினைக் கவருகின்ற—அவள்
சிரிப்பினையென் மனத்தெழுப்பும்

நீலநிறவானிடத்தில்—நின்று
நிலவெறிக்கும் முழுமதியம்
கோலநிறை கோதையளின்—சார்
குளிர்வதன மெனத்திகழும்

ஆரவுயர் வானிடையே—அங்கு
சொரிந்திடுவெண் முத்தமெனும்
தாரகைகள் கண்சிமிட்டி—இங்கு
தனித்துழலும் எனைப்பழிக்கும்

கார்முகிலின் குவியலிடை—தோற்றக்
காணுமொரு மின்கொடிதான்
ஊர்முழுதும் போற்றுமவள்—கொடி
உருவினையென் னுளத்தெழுப்பும்



இடித்திடித்து நடுங்கவைத்து—எங்கும்
எதிரொலிக்கும் இடிமுழக்கம்
துடித்திடுமென் மனத்தெழும்பும்—பல
துயர்க்குமுற லெனவொலிக்கும்

காட்சியெலாங் கடுவிடமே—இங்கு
காலன்விடு கொடுகணையே
மீட்சியினி யென்றுறுவேன்—என்
மென்கொடியை யென்றணைவேன்

என்றுமிக வேக்கமுற்று—என்
இதயமுமே வெடித்துவிடக்
கொன்றெனையே வாட்டிவளர்—அக்
கொடுந்துயரில் மூழ்குகையில்

கண்ணம்மா வெனும்பெயராள்—என்
கண்மணியே போன்றமைவாள்
மண்ணகத்தில் வாழ்வுதந்தாள்—தன்
மலர்முறுவல் காட்டிநின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதிலுறை காட்சிகள்


பண்ணெழுகும் பாற்கடலிற்
பதிந்துவரும் வெண்ணிலவும்
வண்ணமுற வானுயர்வில்
வந்துமிளிர் விண்மீனும்
உண்மைபெற வுலகினிடை
ஓங்குமன்புப் பெருங்குவையும்
கண்குளிரக் காசியினிற்
காணுகின்ற காட்சிகளே.

வண்டினங்க ளிசைபாட
வானோங்கும் மரக்கிளையும்
கண்டிடினுங் கலியோட்டுங்
காராளர் பண்சுவையும்
உண்டெனினும் உலர்வெனினும்
ஒறுக்காதோர் வண்கொடையும்
தொண்டனது உள்ளத்தில்
தோற்றிடுநற் காட்சிகளே.

குளிர்காவிற் பதிவிருந்து
கூவிடுநற் கோகிலமும்
தளிர்மறையத் தாங்கிநின்று
பூத்தொளிருந் தண்மரமும்
ஒளிருள்ளம் உயர்வுபெற
உணர்த்திவரும் போதனையும்
களிகொள்ளக் கவிசுரக்கும்
கருத்தினிய காட்சிகளே

தேருருளும் வேளையிலே
திரண்டுவருஞ் சனத்திரளும்
கார்விழவே கழனிகளில்
களித்திடுநல் நெற்பயிரும்
பார்முழுதும் பரவிவரும்
பரயோகப் பெருங்குழுவும்
ஊர்முழுதுங் கொண்டாட
உளமுறையுங் காட்சிகளே.

பேயுலவு மிரவினிலே
பெரிதமையுந் தனிச்சிறப்பும்
காய்குலுக்கிக் கனிந்துநின்று
தேனூற்றுங் கனிமரமும்
தாயினுடன் சமைந்துநின்று
தனித்துலவும் பேரன்பும்
வீயாத புகழுடைய
வியனுலகக் காட்சிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் காட்சிகள்

இந்து சமுத்திரத்தின் நித்திலமெனத் திகழும் இலங்கைத் தீவின் கண்கவர் காட்சிகளையும் புராதன சிற்பங்களையும் கண்டு மகிழும் வண்ணம் இங்குற்ற ஒருத்தனை அவனின் நண்பனொ இலங்கை வாசி ஒவ்வோரிடத்துக்கும் இட்டுச் சென்று ஆங்காங்கு காணுங்காட்சிகளை விஸ்தரிக்கின்றான்.

ஆருயிர்த் தோழா! அகமகிழ் வுறவே
அளப்பருங் காட்சியி னதிசயங் கேளாய்
மாயிரு ஞாலத் தீதிது போலும்
மகிழ்தரு காட்சிநீ கண்டதோ கூறாய்

வனத்தின் செழுமை வழியெலாங் காண்பாய்
வாரிதி சூழும் இலங்கை தன்னில்
மனத்தைக் கவரும் மாண்புறு வளங்கள்
மண்டிக்கிடத்தல் மருங்கெலாங் காண்பாய்

அன்னை சக்தியின் அருள்நிறை வடிவம்
அழகு சொட்டும் மலர்களிற் காண்பாய்
பின்னும் முன்னும் பேரெழில் காலும்
பெருமைக்காட்சிகள்பெண்ணவள்வடிவாம்

ஆறுங் காண்பாய் மலையுங் காண்பாய்
அழகுறை பள்ளத் தாக்குங் காண்பாய்
நாறும் மலரின் நறிய தேனை
நண்ணும் வண்டினப் பண்ணுங்கேட்பாய்

உயர்ந்த மலையின் உச்சியின் சாரலில்
உன்னத மரங்க ளுயர்வுற வளர்ந்து
நயந்தே நாடும் நன்மைகள் பலவும்
நமக்கு நல்குதல் நாளுங் காண்பாய்



தேயிலை றப்பர் தென்னைத் தோட்டமும்
தித்திப் பான கனிகளைச் சிதறும்
ஆயிரம் வகைசேர் மரங்களின் காவும்
அன்பனே யீங்குநல் லதிசயங் காண்பாய்

மலையினிற் றிகழுறும் மதியிவை யெனவே
மாண்புறு குன்றொளிர் தாமரை யெனவே
குலவியே யங்குறை கோதையர் வதனம்
கூவிடும் வண்டியி லிருந்துநீ காண்பாய்

கொண்டற் கூட்டம் குவிந்து திரண்டு
குளிர்மை கூட்டுங் குன்றினி லுருண்டு
அண்டரும் வியக்க அமைக்குங் காட்சி
அவனியி லின்று முதன்முறை காண்பாய்

பச்சைத் தென்னை பாங்கொடு காண்பாய்
பருத்திடு குலைகள் தூங்கக் காண்பாய்
இச்சை கொண்டே ஏறுநல் மந்தி
இளநீர் பறித்தும் எறியக் காண்பாய்

மருட்சி நிறைந்த மானின் கூட்டமும்
மதமது பொழியுந் தந்தியின் தோற்றமும்
அருட்சி கண்டிட அஞ்சிப் பறக்கும்
அழகிய பட்சிச் சாலமுங் காண்பாய்

புத்த பிரானின் புதுமைக் குகைகள்
பூமியி லுயர்ந்த பொருப்பினிற் காண்பாய்
மெத்தநீ வியக்கும் வெறிதரு சித்திரம்
மிளிர்வன இன்றும் உயிரொடு காண்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரங் கால்நிறை மண்டபங் காண்பாய்
அழிந்தும் அழியாப் புகழதுங் காண்பாய்
பேயிருள் சூழும் பெரிய குகையினுள்
பெட்புறு கலையின் பெருக்கமுங் காண்பாய்

பழைய ஓவியங் கட்டிடம் பலவும்
பழங்கதை யுரைத்தல் பரிவுடன் கேட்பாய்
விழைவுறு மவற்றின் விந்தைக் கதையில்
விரிந்த சரித்திர விளக்கமுங் காண்பாய்

இயற்கை அன்னையின் எழில்பல காண்பாய்
இவளது நடனம் பொழில்களிற் காண்பாய்
கயற்கணி அம்மை கருணையுங் காண்பாய்
காட்சிக ளெல்லாங் கருணையின் நிறைவே.



# இலங்கை வனக் காட்சிகள்

வானுயர் படர்ந்த கொம்பர்
மரமெலாம் வையந் தன்னில்
கானவளர் செடியைக் காத்துக்
கதிரவன் வெயிலை யேந்தும்
தேனமர் பூக்கள் கொண்ட
கொடிகளும் சிக்கிப் பின்னி
வான்படர் கொம்ப ரேறி
வனத்தினில் வளர்வு கொள்ளும்.


மஞ்சுகள் மோதி மோதி
வானத்தி லிடித்தல் போல
வெஞ்சினங் கொண்டு மேதி
வீறுட னெதிரும் போது
அஞ்சிய மந்தி தன்னை
அணைத்துயர் கடுவன் சேர்க்கும்
நஞ்சுகொள் நாகம் புக்குப்
புற்றினுள் நடுக்கங் கொள்ளும்.

புகைவண்டி கூச்சல் கேட்டுப்
புறத்தினில் நின்ற யானை
திகைகொண்டே யோட லாலே
திடுமென மரங்கள் சாயத்
தொகைகொண்ட சுளைகள் காணும்
பலாப்பழம் சுவைக்கும் மந்தி
நகைகொண்ட கடுவ னோடும்
நக்குநக் குடலம் நோகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித வன்னப் பட்சி
பாடியே பறந்து போகும்
நலமிகு மயில்கள் நின்று
நடனங்கள் செய்யக் காணும்
இலைசெறி மரங்கள் தன்னில்
இன்மலர் நிரம்பிச் சேரும்
வலைவிழி மாதராரும்
வனத்திடை வதிவு கொள்வர்.

வனத்தினை வெட்டி வீழ்த்தி
வளருநற் பயிர்கள் நாட்டிச்
சினத்திடு மேதி யோடுஞ்
சீரிய கறவை காத்தே
இனத்தினர்க் குதவும் மக்கள்
இங்குமங் குறைவு கொள்வர்
தனத்தினைப் பெருக்கும் நல்ல
வழிகளுஞ் சமைத்து வைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகில்

கறுத்து வானங் கவிந்திடுவாய்—நீ
கனக மழையைப் பொழிந்திடுவாய்
எறிக்கும் பரிதி செவ்வொளியில்—நீயும்
ஏற்றம் பெற்றே இலங்கிடுவாய்

குன்றில் தவழ்ந்தும் உருண்டிடுவாய்—அங்கு
குதித்து நீ யோடி மறைந்திடுவாய்
தென்றல் நுழையுஞ் சோலையிலே—மலர்
சிரிப்புக் காணப் படிந்திடுவாய்

உயர்ந்த மாளிகை கோபுரமும்—பரி
ஓட உருண்டிடுக் தேரினமும்
நயந்து வானில் நண்ணிடவே—நீயும்
நவநவ அமைவிற் றிகழ்ந்திடுவாய்


விந்தை தருநற் குன்றுகளும்—அங்கு
வெள்ளி யாற்று வீழ்ச்சிகளும்
வந்து வானில் தோற்றமுற—நீயும்
வகைவகை வனப்பு வளர்த்திடுவாய்


ஓட்டப் பந்தயம் வைத்திடுவாய்—வானில்
உறுமியே நின்றும் ஒலித்திடுவாய்
பாட்டுப் பாடும் புலவருளம்—நீயும்
பண்ணுமே பொங்கப் படித்திடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப்பயிர் பசேல்வளர
பாரிலுள்ளோர் தாம்மகிழ
இச்சைகொண்டு நாம்திரிவோம்—தங்கமே
ஏற்றங்கண்டு கதிரொளிரும்—என் தங்கமே
ஏற்றங்கண்டு கதிரொளிரும்.

காரறுத்துக் கண்ணிலொற்றிக்
கனகக்குன்ற மெனக்குவியும்
ஏருதந்த பெரும்பயனை—தங்கமே
இன்பமொடு வீடுசேர்ப்போம்—என் தங்கமே
இன்பமொடு வீடுசேர்ப்போம்.



## சூரிய  வணக்கம்

(பொங்கற் பாட்டு)

வருவாய் வருவாய் கதிரோனே
வயங்கும் புவன மொளிர்வோனே
தருவாய் நினது பேரொளியே
தலத்தில் இருளும் அகன்றிடவே.

கமலம் விரிந்து வரவேற்க
காசினி போற்றிக் கைகூப்ப
அமர வாழ்வும் அணைந்திடவே
அருண தோற்றந் தருவாயே.


கொன்றை குலுக்கி மலர்சொரிய
குயில்கள் ஏற்ற இசைபுரிய
நன்று மயில்கள் நடமாட
நாடி யெம்மை வருவாயே.

முனிவர் கனிந்து மறையோத
மொட்டுக ளவிழ்ந்து சுரும்பூத
வனிதைய ருன்னை வாழ்த்திடவே
வருவாய் வள்ளல் வருவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவந் தந்த பச்சரிசி
பசும்பால் தேனு முடன்கூட்டி
சருவந் தன்னில் வேகவைத்து
தகுந்த பொங்கல் படைத்திடுவோம்.

இனிய முக்கனி நெய்யுடனே
எங்கள் அமுதம் ஏற்றிடுவாய்
கனியும் உன்றன் அருளினையும்
காசினி யெங்கும் பொழிந்திடுவாய்!



## ஏழையின் பிரார்த்தனை

அண்ட மதிர முடிவே காண
இடியுங் குமுறுதே
ஆகா யத்தை மின்னல் வெட்டுத்
துண்டம் போடுதே
கொண்டல் கூடிக் கருமை சேர்ந்து
குவிந்து காணுதே
கோபங் கொண்ட வாடைக் காற்றுஞ்
சுழற்றி யடிக்குதே
விண்டு அரிய புதுமை யெல்லாம்
விண்ணில் தோற்றுதே
வீழ்ந்து மரமும் முறிந்து சாய்ந்து
வாட்டங் காட்டுதே
குண்டு போலுங் குவிந்த துளியை
வானங் கொட்டுதே
கூச்சல் போட்டுப் பறவைக் கூட்டங்
குடுகிக் கொள்ளுதே.

கொக்கின் கூட்டம் கழனி யெங்குஞ்
சுற்றிப் பறக்குதே
கோட்டைப் பொந்தில் கோட்டானுந்தான்
குந்திக் கொள்ளுதே
பக்க மெங்கும் பேரிரைச்சல்
பதறக் கேட்குதே
பாழும் வீடும் ஓட்டை கொண்டு
படுக்கை நனைக்குதே
சத்தி யன்னை வித்தை யெல்லாங்
காட்டு கின்றாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்ப ருக்குள் வீட்டுப் பூனை
சயனங் கொள்ளுதே
துக்கம் பொங்கப் பசியும் விஞ்சச்
சோரு கின்றேனே
தூக்க மின்றி நாலு நாளாய்
வாடு கின்றேனே.

மெத்த மழையும் பத்து நாளாய்க்
கொட்டிப் பெய்யுதே
மேதி னியைத் திகைக்க வைத்துச்
சறுக்கி வீழ்த்துதே
தத்துந் தவளை தத்தோ மென்று
தாளம் போடுதே
தாவிக் குதித்து வாவிக் குள்ளே
வெள்ளம் பாயுதே
பத்தி வீழ்ந்து கன்றுக் குட்டி
பதறித் துடிக்குதே
பாலு மின்றித் தாயுங் காணுப்
பரத விக்குதே
சத்தி யன்னை! சத்தி யன்னை!
சரணம் சரணம்
தரணி தன்னில் கேடு ருது
தாங்கிக் காப்பாயே!

பச்சைப் பயிரை மெத்த வெள்ளம்
முற்றும் மூடுதே
பார்க்குந் திசைகள் அலைய டித்து
எங்குஞ் சாடுதே



கச்சை கட்டிக் காவல் காத்த
தோட்டக் காரரும்
காலே கடுக்க ஓட்ட மோடிக்
குடிசை புக்கனர்
நச்சைக் கக்கும் பாம்பு தானும்
நலிவு கொண்டுமே
நாற்றி சையும் ஓடி யோடி
அலைவு கொள்ளுதே
இச்சை கொண்டே எங்குந் திரியும்
என்தன் மைந்தனும்
ஈங்கு வந்து சுகமே சேரத்
தாயே காப்பாயே!

உண்டிக் குழைக்க உயிரே போல்வான்
தூரஞ் சென்ருனே
ஊக்கத் தோடுங் காளை யோட்டிக்
கடுகிச் சென்ருனே
வண்டி கொண்டு போன மைந்தன்
வரவுங் காணேனே
வாவிக் குள்ளே வண்டி பாய
மாண்டு விட்டானே?
கொண்டல் முழங்குங் குறியுங் கண்டு
குதித்துச் சென்ருனே
கூப்பி டவுந் தேற்றங் கூறி
விடுத்துச் சென்ருனே
மண்டி யிட்டுன் அடியும் பணிந்தேன்
மனது வைப்பாயே
மாநி லத்தை யீன்ற தேவி
மகனைக் காப்பாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரி ருளும் பக்க மெங்கும்
கடுகி வருகுதே
கண்ணி லொளி காட்சி குன்றப்
புவனம் மறையுதே
பேரி ரைச்சல் சேர வெங்கும்
மழையும் பெய்யுதே
பெற்ற மனம் சோர்வு கொண்டு
மெத்த மாயுதே
ஊரி னிலே உறு துணையு
மொருவ ரில்லையே
உன்னை நம்பி அன்னை நானும்
வாழு கின்றேனே
தூரத் திலே மழுங்க லொளி
தோன்றக் காணுதே
துள்ளு மொரு காளை வண்டி
வெளிச்சமது தானோ?



## பாலர் கீதம்

தமிழைநன்கு படித்திடுவாய் பாப்பா—தினம்
தாழ்ந்தவுயிர்க் கிரங்கிடுவாய் பாப்பா
அமலன்பதம் பணிந்திடுவாய் பாப்பா—அவன்
அருள்நிறைவு பெற்றிடுவாய் பாப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோர்  வணக்கம்

அன்னையே! தந்தையே! நமஸ்காரம்
அனுதினம் அன்பாய் வளர்த்திடுவீர்
முன்னறி தெய்வம் நீரன்றோ
முன்னின் றெம்மைக் காத்திடுவீர்.

சொன்ன சொற்கள் கேட்டிடுவோம்
துதிசெய் தும்மைப் போற்றிடுவோம்
கன்னஞ் சிவக்கத் தினமும்நீர்
கணக்கில் முத்தம் ஈய்ந்திடுவீர்.

இனிய பண்டம் அளித்திடுவீர்
இன்பம் பொங்க வளர்த்திடுவீர்
மனையும் விளங்க நாங்களுமே
மங்கா விளக்கென் றொளிர்ந்திடுவோம்.

சுற்றி நாங்கள் ஆடிடுவோம்
சூழ்ந்து நும்மைப் பாடிடுவோம்
கற்ற பாடம் ஓதிடவே
கனிந்து நீரும் கேட்டிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலி வா

அம்புலி அம்புலி வாவாவா
அழகிய சொக்கா வாவாவா

உயர ஏனோ நிற்கின்றாய்
ஓடி இங்கு வருவாயே

கோயில் குளங்கள் போய்வருவோம்
கும்பிட் டேநாம் வரம்பெறுவோம்

நல்ல மிட்டாய் உனக்கிரண்டு
கயந்து நானும் தந்திடுவேன்

என்னோடு நித்தம் இருந்திடுவாய்
எனக்கொரு முத்தம் தந்திடுவாய்.





## நல்ல பாப்பா

தோழா எனக்கொரு பாப்பாவுண்டு
தொட்டிலே அதனின் வீடாகும்
வீழா ததைநான் அணைத்திடுவேன்
விளையாட் டெல்லாம் காட்டிடுவேன்.

கையைக் கையை ஆட்டுமடா
காலை மடக்கி நீட்டுமடா
பைய மெல்ல அடியெடுத்துப்
பாரில் நடந்தே உலவுமடா.

புத்தகந் தன்னைக் கிழிக்குமடா
பொருட்களை வாரிச் சிதைக்குமடா
எத்தனை குற்றம் செய்தாலும்
எவர்க்கும் அதனிற் பட்சமடா.

என்னைக் கண்டாற் சிரிக்குமடா
இன்பக் கதைகள் உரைக்குமடா
சின்னக் கையா லடிக்குமடா
சேர்த்துப் பின்னர் அணைக்குமடா !

# ஆட்டுக் குட்டி

ஆட்டுக்குட்டி எந்தன்குட்டி
　　அருமையான சின்னக்குட்டி
ஓட்டமோடி வந்திடுவாய்
　　உனக்குமுத்தம் தந்திடுவேன்.


துள்ளித்துள்ளிப் பாய்ந்திடுவாய்
　　சுவரிலேறிக் குதித்திடுவாய்
கள்ளன்கொண்டு போய்விடுவான்
　　கட்டியுன்னை வைத்திடுவான்.

வீடுவிட்டுப் போய்விடாதே
　　வெளியேபூதம் காத்துநிற்கும்
சோறுனக்கு நானல்லவோ
　　துள்ளியிங்கு வந்திடுவாய்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பட்டம் ஒன்று பறக்குதுபார்
பனையின் உயர நிற்குதுபார்
வெட்ட வெளியில் விந்தையுடன்
விளையாட்டுக்கள் புரியுதுபார்.

குத்துக் கரணஞ் சிலபோடும்
குதித்துக் கிளம்பி வானேறும்
பத்து முழத்துப் பாம்பெனவே
பாங்குடன் நின்றும் அசைந்தாடும்.

தம்பி வந்து பட்டம்பார்
தாவிக் குதிக்கும் அதுவோபார்
நம்பி உனது கைதனிலே
நானுங் கயிற்றைத் தரமாட்டேன்.

ஐயோ! எனது பட்டமெங்கே
அறுத்துக் கொண்டே ஓடுதடா
கையோடிங்கு சிலமுழத்துக்
கயிறு தானே காணுதடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நானோர் சின்ன வீரன் தானே
எனது திறமை கேளடி மானே !

ஓட்டைப் பானை ஒன்றைக் கண்டேன்
உள்ளோ ரெலியும் நுழையக் கண்டேன்.

பானையுட் கையை விட்டுக் கொண்டேன்
பதுங்கிய எலியைப் பிடித்துக் கொண்டேன்.

கையை எலியும் கடித்து விட்டது
கதறி நானுங் கையை விட்டேன்.

எலியோ துள்ளி உயரப் பாய்ந்தது
எட்டாப் பரணுள் குதித்து மறைந்தது.

கோபம் வந்தது முகமுஞ் சிவந்தது
கொட்டன் கொண்டு பானையை உடைத்தேன்.


கொட்டன் ஒடிந்தது குடமும் உடைந்தது
கோட்டை வெடிபோல் சத்தமு மெழுந்தது.



ஐயா ஓடி அங்கே வந்தார்
அடுத்து ஐந்தடி எனக்குத் தந்தார்.

நானே அழுதேன் அம்மா வந்தா
நாலு ஏச்சும் எனக்குத் தந்தா.

நானோர் சின்ன வீரன் தானே
எனது திறமை கேளடி மானே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள்



வட்ட வட்டப் பூக்கள்
　　வண் டூதும் பூக்கள்
எட்ட டுக்குப் பூக்கள்
　　இனிய றோசாப் பூக்கள்.

மஞ்சட் பூவும் பாராய்
　　மாற்றுப் பொன்னைப் போலே
கொஞ்சிக் கொஞ்சிப் பாராய்
　　கொண்டை சூட்டிக் கொள்வாய்.

நல்ல நல்ல பூக்கள்
　　நறிய வாசப் பூக்கள்
பல்லைப் போலும் வெள்ளை
　　பகட்டும் முல்லைப் பூவே.



# பூக்கள் பறிப்போம்



பூக்கள் பறிப்போம் பாங்கி மாரே
　　புதிய மாலை தாம் தொடுப்போம்
காக்குங் கடவுள் தனக்குச் சூட்டிக்
　　கனிந்து நின்று பாட்டிசைப்போம்.

அண்டை வீட்டுக் கொடியினில் முல்லை
　　அழகிய வெண்பூச் சொரியுது பாரீர்
கெண்டை யொத்த கண்ணுடை நீவிர்
　　கிங்கிணி யொலிக்கக் கூத்துக்க ளாடீர்.

கொண்டையி லொருபூச் சூட்டிக் கொள்வோம்
　　கூடையில் நிறைய மலருங் கொய்வோம்
செண்டு செய்வதற் கேற்ற புட்பம்
　　சில சில நாமுந் தேடியே வைப்போம்.

அன்னையின் தாளுக் கிதிலொரு புட்பம்
　　ஆருயிர்த் தந்தையின் தாளினுக்கொன்று
பொன்முடிக் கோபுரப் புனிதனுக் கொன்று
　　புதுப்புதுப் புட்பம் பறித்திட வாரீர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பூஜை

தம்பி நாங்கள் கோயில் கட்டிச்
சாமி யொன்றை உள்ளே வைத்துக்
கும்பிட் டிங்கு பூசை செய்வோம்
கூடி ஆடிப் பாடிக் கொள்வோம்.

நானே ஐயர் நானே மேளம்
நானே நல்ல காவடி யாட்டம்
தான தான தந்தன தான
தான தான தந்தன தான.

ஒட்டை வாளி நல்ல மேளம்
ஓலைச் சுருளே நாத சுரம்
பாட்டுப் பாடிப் பசனை செய்வோம்
பக்தி யோடும் பூசை செய்வோம்.

நாட்டு மேளம் நன்கு கொட்ட
நாலு சிறுவர் சாமி தூக்க
வீட்டைச் சுற்றி வீதி வருவோம்
வேண்டிய வரமும் சாமி தருவார்.

---



# ஜீவ இரக்கம்

நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக் கல்லா லடிக்காதே
வண்டைப் பிடித்து வருத்தாதே
வாயில் பிராணியை வதைக்காதே.

கோழிக் குஞ்சைத் திருகாதே
குருவிக் கூண்டைச் சருவாதே
ஆழி சூழும் உலகேத்தும்
அன்பு காட்டி வதிவாயே.

ஊனைத் தின்று வாழாதே
உயிரைக் கொன்று தாழாதே
மானைக் கொன்றால் மான்கன்று
வருந்தல் நீயும் அறிவாயோ?

கிளியைக் கூண்டில் அடைக்காதே
கேடுனை வந்து சூழ்ந்திடுமே
ஒளியே யில்லாச் சிறைதனிலே
உன்னை வைத்தாற் சகிப்பாயோ?

எல்லா உயிரும் இறைமகவே
இன்பம் நாடி உழைப்பனவே
பொல்லாப் பொன்றுஞ் செய்யாதே
புனித வாழ்வு காண்பாயே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டு கிளி




பச்சைக்கிளி பவளச்சொண்டா
பாரிலுன்னை அடைத்தவரார்
இச்சைகொண்டு திரியுமுன்னை
ஏனோ இங்கு அடைத்துவைத்தார்

கத்திக் கத்திச் சாகின்றாயே
கலங்கிநீயும் மாய்கின்றாயே
வைத்தபழம் ஏனோதின்னாய்
வருத்தமென்ன சொல்லுவாயே

எனக்குரண்டு குஞ்சுமுண்டு
இரையுமின்றி வாடிநிற்கும்
பனைக்குமேலும் பத்துக்கிளி
பதைபதைத்துத் தேடிநிற்கும்

இப்போதுன்னை விட்டிடுவேன்
இனியகூட்டஞ் சேர்ந்திடுவாய்
சத்தியஞ்செய் என்னைநீயும்
தரணிதன்னில் மறந்திடாதே.



# ஆகாய விமானம்



ஆகா! அதுவோ என்னண்ணே
ஆகா யத்திற் பறக்கிறதே
ஓகோ! இதுபோ லொருநாளும்
உலகில் அதிசயங் கண்டிலனே.

இரைச்சல் மிகவுங் கேட்கிறதே
எழுந்து வானுள் மறைகிறதே
சிரத்தை யுடனீ பார்த்திடுவாய்
சிறியேன் தனக்குச் செப்பிடுவாய்.

அதுவோர் வான ஊர்தியடா—தம்பி
அதிசயம் நிறைந்த செய்கையடா
இதுபோல் விரைவிற் பறப்பதற்கு
எந்தப் பட்சியும் நிகரில்லை.

ஆட்கள் அதிலே இருப்பாரே
அகன்ற வானிற் பறப்பாரே
நாட்டங் கொண்டு நீயறிவாய்
நாடுக ளெல்லாங் கடப்பாரே.

இயந்திரங் கொண்டே இயக்கிடுவர்
இறக்கைகள்கொண்டே உயர்த்திடுவர்
நயந்தர நீயும் நன்கறிவாய்
நாடுக ளெல்லாங் கடப்பாரே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிரும் விண்மீன்

ஒளிர ஒளிர நின்றிடுமோர்
உயர்ந்த வானின் தாரகையே
அளிக்கும் வியப்பும் அளவிலவே
அழகிய வைரந் தானதுவோ?

தழலைக் கக்கும் வெய்யோனும்
தன்னொளி மடக்கித் தலைசாய
விழைவொடு நீயுன் சிற்றொளியை
விண்ணில் வீசி விளங்கிடுவாய்.

ஏங்கிச் செல்லும் வழிப்போக்கன்
இரவில் காணும் நின்னொளியைப்
பாங்கொடு போற்றிப் பலகாதம்
பயனொடு துணைக்கொண் டேகிடுவான்.

நீல வானில் நிலைபெற்று
நிலத்தோர் வியப்பக் கண்சிமிட்டி
சாலத் துயிலும் என்னிலைமை
சகத்தில் நாளும் பார்த்திடுவாய்.

எட்டா வானில் நீநின்றே
என்னது நாளை எண்ணிடுவாய்
மட்டே யில்லாக் காலம்நீ
மகிழ்வுட னொளிர்வது மெதனாலோ?

அந்த வகையைக் கூறிடுவாய்
அகன்ற வானத் தாரகையே!
இந்த உலகில் நிலைபெற்று
யானும் வாழ வகையுண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணைச் செயல்




சிறிய துளிகள் பலதிரண்டு
சிறிய மணல்கள் ஒருங்குருண்டு,
பெரிய கடலாய் மாறுவதும்
பேர்புவி யாவதுங் காண்பாயே.

சிறிய நிமிடம் அடுத்தோடி
சேர்ந்து சேர்ந்து பலவாகி
அறியாக் காலத் தொடர்ச்சிக்கும்
அதுதா னம்சங் காண்பாயே.

சிறிய கருணைச் செயலதுவும்
சிறிய அன்புச் சொல்வகையும்
வறிய புவியை வளமாக்கி,
வானுல கென்ன வைத்திடுமே.

---

# காலைப் பொழுது




கூ கூ கொக்கரக் கோவென்று
கோழிச் சேவலுங் கூவிறது
காகா காகா வென்றிங்கே
காகமுங் கரைந்து பறக்கிறது.

பொழுது புலருது பார்த்திடுவீர்
புன்னகை பூக்குது மரங்களுமே
தொழுது கடவுளை மனத்திருத்தி
துரித முடனீர் கண்விழிப்பீர்.

தம்பி! தங்காய்! எழுந்திடுவீர்
தந்தை தாயைத் தொழுதிடுவீர்
சிந்தை செலுத்திப் பாடத்தைச்
சிறிது நேரம் படித்திடுவீர்

பல்லைத் துலக்கி முகங்கழுவிப்
பசியுந் தீர உணவருந்தி
நல்ல உடைகள் தாமுடுத்தி
நாளும் பள்ளி போய்வருவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாப்பா

பள்ளிக்குப் போய்வருவாய் பாப்பா—நல்ல
பாடமெல்லாம் படித்திடுவாய் பாப்பா
துள்ளிநீ விரைந்திடுவாய் பாப்பா—பின்
துரிதமுடன் வந்திடுவாய் பாப்பா.

பொட்டொன்று நெற்றியிட்டுப் பாப்பா—நீ
புனிதமுறும் உடையுடுத்திப் பாப்பா
இட்டமுள தோழருடன் பாப்பா—என்றும்
இணங்கியுநீ போய்வருவாய் பாப்பா.

துட்டருடன் கூடிடாதே பாப்பா—தினம்
தூயவாழ்வு வாழ்ந்திடுவாய் பாப்பா
கெட்டவர்கள் கூட்டுறவால் பாப்பா—பல
கெடுதிகளும் சூழ்ந்திடுமே பாப்பா.


பொறுமைமிக நல்லதடி பாப்பா—என்றும்
புண்ணியஞ்செய் துய்ந்திடுவாய் பாப்பா
சிறுவண்டி யளித்திடுவேன் பாப்பா—நினைச்
சீருடனே வளர்த்திடுவேன் பாப்பா.

சத்தியத்தைக் கைவிடாதே பாப்பா—இங்கு
தாழ்வெதுவு மில்லையடா பாப்பா
உத்தமனாய் வளர்ந்திடுவாய் பாப்பா—மிக
ஊக்கமுடன் உழைத்திடுவாய் பாப்பா.



நாடகம்நீ நடித்திடுவாய் பாப்பா—இங்கு
நலமெல்லாம் வளர்த்திடுவாய் பாப்பா
கோடையிடி யிடித்தாலும் பாப்பா—நீ
குறுநடுக்கங் கொண்டிடாதே பாப்பா.

தமிழைநன்கு படித்திடுவாய் பாப்பா—தினம்
தாழ்ந்தவுயிர்க் கிரங்கிடுவாய் பாப்பா
அமலன்பதம் பணிந்திடுவாய் பாப்பா—அவன்
அருள்நிறைவு பெற்றிடுவாய் பாப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுள் வணக்கம்


எங்கும் நிறைந்த பரம்பொருளே !
இதயம் விளக்கும் பேரொளியே !
தங்கக் குழந்தைகள் நாமன்றோ
சகல உயிரும் உமதன்றோ.

நித்தம் எம்மைக் காத்திடுவீர்
நெருங்கு துன்பம் போக்கிடுவீர்
சித்தம் ஒன்றிச் சேர்ந்திங்கு
சிறியேம் உம்மைப் போற்றுவமே.

தாயுந் தந்தையும் நீரன்றோ !
சந்திர சூரியர் நீரன்றோ !
காயுங் கனியும் நீரன்றோ !
கரும்பும் சுவையும் நீரன்றோ !



# தீப வணக்கம்



எங்கும் நிறைந்த பேரொளியே !
இருளினைப் போக்கும் வெண்சுடரே !
மங்கைய ருன்னை வாழ்த்துகின்றோம்
மாநிலத் துன்பம போக்கிடுவாய்.

கொடுமைக ளெல்லா மழிந்திடவே
குவலயம் மகிழ்வு கொண்டிடவே
அடிமையு மரசனென் றொளிர்ந்திடவே
அவனியில் நல்லொளி கான்றிடுவாய்.

அன்றொரு பாரத மளித்தவனின்
அருளொளி தன்னைக் கூட்டிடுவாய்
நன்றினி நாமும் வாழ்ந்திடவே
நவநவப் புதுமைகள் விளைத்திடுவாய்.

உலகம் ஒளிர்வதும் உன்னருளே
உள்ளொளி விளக்கமும் நின்னருளே
தலமிசை நின்னை வாழ்த்துகின்றோம்
தணிவில் நின்சுட ரோங்குகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி



தானமே தவம தாகும்
  தரணியி வீடு மில்லை
வானமும் வையங் காண்பாய்
  வழங்கிநீ வாழ்வை யாயின்
கூனுடைக் கிழமே தெய்வம்
  கொடும்பசி யுற்றோர் தெய்வம்
ஏனிதை யறித லின்றி
  ஆலயம் இரந்து நிற்பாய் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மலர்





உள்ளத்திற் கள்ளம்நீங்கி உணர்வு பொங்க
ஓடியேயுன் அகந்தையெலா முன்னை நீங்க
வெள்ளைமலர் வீற்றிருக்கும் வாணி யன்னை
விழைவுடனே யுன்பக்கம் வந்து நிற்பாள்
கொள்ளையுளம் கொண்டிடுநற் கவிதை யெல்லாம்
குறிப்புடனுன் நாவினிலே வரைந்து வைப்பாள்
தெள்ளியநற் புலவனாக வேண்டு மென்றால்
சிரந்தாழ்த்தி யவள்பதத்தை யேத்தல் செய்வாய்


வெள்ளைமலர் என்பதுவுன் இதய மடா
வீண்டம்பம் பொய்மைதனை விரட்டி யோட்டு
கள்ளமுடன் நீவாழ்ந்தாற் கருமை சேரும்
கானமுறை பேய்களெலாங் கடிதிற் கூடும்
பள்ளமதில் வீழ்வுறாதே பதறி டாதே
பரம்பொருளைக்காண்பதற்குவழியுஞ்சொல்வேன்
அள்ளியள்ளிப்பொருள்கொடுத்துங்காணமாட்டாய்
அன்பினைநீ வளர்த்திடுவாய் அத்தன் காண்பாய்.

அத்தனுமோ ராண்டியடா அவனி தன்னில்
அண்டியுனைப் பிழைப்பவர்கள் அத்த னடா
சித்தரெனத் தீனங்கூறித் திரியும் பேர்கள்
சிவத்தினைத்தாம் கண்டமென்பர் சிறிதும் நம்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியுடன் கோயில்புக்குங் காண மாட்டாய்
பரம்பொருளைக்காண்பதற்குவழியுஞ்சொல்வேன்
நித்தியமு முயிர்களைநீ போற்றி வாழ்ந்தால்
நிமலனும்வந் துன்னுள்ள முறையக் காண்பாய்.

கொலைகளவு கட்காமம் கொடிய பேய்கள்
குவலயத்தில் இவைகளைநீ விரட்டி யோட்டின்
பலிதமுடன் பரம்பொருளை எளிதிற் காண்பாய்
பராசக்தி அன்னையவள் படிவு கொள்வாள்
வலுவுடனீ தூய்மைதனை வளர்த்துக் கொண்டால்
வையகத்தில் விண்ணவனாய் மாறி நிற்பாய்
நலிவுகளும் நமன்பயமும் நினைவிட்டோட
நல்வாழ்வு கடைப்பிடித்து நாளு முய்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வயோதிபன்

நடையினில் தளர்வு காணும்
நடுங்கிய உடலங் காணும்
இடையினில் கந்தை காணும்
இவனிலை யெடுத்துக் கூறும்
படியினின் வறுமை கண்டும்
பதர்கள்போ லிரத்த லின்றித்
திடமுள தொழிலைப் பேணிச்
சீரிய வாழ்வுங் கொள்ளும்.


வயதுமோ ரெண்ப தாகும்
வாட்டமி லுளத்தி னோடுந்
தயவினை நாடி வாழுந்
தரத்தினர் பாடங் கற்கச்
சுயதொழி லொன்று வேண்டித்
தோளினில் வாழைக் குற்றி
வியக்கவே கொண்டு செல்வான்
விடுதியி லதனைச் சேர்த்து

வாழையின் மடல்கள் தன்னை
வலியிலாக் கையால் வாட்டி
நாழிகை யோயா னாகி
நண்பகல் பொழுது முற்றும்
ஏழைதன் கரத்தி லேந்தி
எடுத்தடி வைத்து வைத்து
வீழுடம் பொன்றைப் பேண
விதியி லூர்ந்து நிற்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையில் மெல்ல மெல்லத்
தளரடி வைத்து வைத்துக்
காலையும் மாலை நேரம்
கடைகளில் மடல்கள் விற்று
நாலிரண் டணுக்கள் சேர
நண்ணியோர் குடிலைச் சேர்ந்தே
ஓலைகொண் டிழைத்த பாயில்
உறங்கியும் வளர்வு கொள்வான்.

இவனையான் காணுந் தோறு
மிதயமே துடிப்புக் கொள்ளும்
அவனியிற் சோம்பி வாழும்
அறிவிலி தன்னை நோவும்
நவநவ வேடம் பூண்டு
நடித்திடு வீண ரெல்லாம்
இவனையோர் குருவாய்க் கொள்ளின்
இகத்தினில் வாழ்வுங் காண்பர்.



# கண் கண்ட தெய்வம்

தோலெலாஞ் சுருங்கக் கண்டு
சுடரொளிக் கோலம் வற்றிக்
காலிரண் டுறுதி யின்றிக்
கையிலோர் கோலு மூன்றிச்
சாலையில் மெல்ல வூருந்
தளர்வுறு கிழவி தன்னை
மாலையி லோர்நாட் கண்டு
மறித்துமென் வண்டி நீங்கி

பாட்டியுன் வறுமை தீர்க்கும்
பாரினில் மக்க ளுண்டோ?
வாட்டமிங் ககற்றி வைக்கும்
வளர்வுறு சுற்ற முண்டோ?
வீட்டினை விட்டு நீங்கி
வீதியே னலைந்து நிற்பாய்?
நாட்டம்நீ நவில்வை யாயின்
நானுமிங் குதவி செய்யும்

என்றுநல் லன்பி னோடும்
இதயத்தின் துடிப்பி னோடும்
குன்றிய பார்வை கொண்ட
கூனுடைக் கிழத்தை நோக்க
இன்றெனக் குதவுஞ் சுற்ற
மிகத்தினி லெவரு மில்லை
மன்றுள் நின்றாடு மையன்
மற்றுமுன் போல்வா ருண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னரு மன்னாள் கையி
லிருந்துதான் நடுக்கங் கொள்ளும்
பன்னத்தா விழைக்கப் பெற்ற
பழையதோர் பெட்டி தன்னுள்
என்மனம் நைந்து நாளும்
இரண்டொரு வெள்ளிக் காசை
அன்னைநீ யேற்பா யென்றே
அன்பினோ டிட்ட போழ்து

அப்பனே நீடு நல்லாய்
அவனியில் வாழ்தி யென்று
பொக்கைவாய் தன்னாற் பாட்டி
பூரிப்பி னோடுங் கூறத்
தப்பிலா ஆசி தன்னால்
தலத்திலோர் மகிழ்வுங் கண்டேன்
நெக்குநின் றுருகு முள்ளம்
நிறைவுமொன் றடையக் கண்டேன்.

பாட்டியைப் பன்னாட் காண்பேன்
பழையநல் லுறவி னோடும்
நீட்டிய கையி லன்பால்
நிறைவுட னேது மீவேன்
மீட்டுநல் லாசி பெற்றே
விரைவிலென் சைக்கிள் வண்டி
ஓட்டியுஞ் செல்வேன் நானோர்
ஒப்பிலா மன்ன னொப்பேன்.




தானமே தவம தாகும்
தரணியி வீடு மில்லை
வானமும் வையங் காண்பாய்
வழங்கிநீ வாழ்வை யாயின்
கூழுடைக் கிழமே தெய்வம்
கொடும்பசி யுற்றோர் தெய்வம்
ஏனிதை அறித லின்றி
ஆலயம் இரந்து நிற்பாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன்



கார்முகில் வண்ணங் காட்டிக்
கருணையே பொழிந்து நாளும்
சீரெலாந் தந்து மென்றன்
சிந்தையை யொடுக்கி யுய்த்துப்
பாரினிற் பெருகும் நல்ல
பயனெலா மீந்தாய் கண்ணா
வாரண மழைத்த வன்று
வானினில் வந்த கோவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணன்  பாட்டு

## இகத்தினொளி

இகத்தினொளி நீயுமின்றே கண்ணா கண்ணா !
  இன்பக்கன வெனக்கும் நீயே கண்ணா கண்ணா
அகத்தினொளி யதுவும்நீயே கண்ணா கண்ணா
  அடியாள்தனை வாட்டுவதேன் கண்ணா கண்ணா

நீலநிறக் கடலும்நீயே கண்ணா கண்ணா
  நெடியவானத் தோற்றம்நீயே கண்ணா கண்ணா
சோலைப்பச்சை தானும்நீயே கண்ணா கண்ணா
  தோற்றங்காட்டி ஏய்ப்பதேனோ கண்ணா கண்ணா

உன்னுருவங் கல்லேயென்பர் கண்ணா கண்ணா
  உன்னுளமு மஃது தானோ கண்ணா கண்ணா
மன்பதைநீ புரப்பவனோ கண்ணா கண்ணா
  மடிவெனக்கு விதியுமின்றோ கண்ணா கண்ணா


வாசமலர் நானும்வேண்டேன் கண்ணா கண்ணா
  வளருமதி தானுங்கூற்றே கண்ணா கண்ணா
வீசுதென்றலென்னைவாட்டுங் கண்ணா கண்ணா
  விடமென்னப் பால்கசக்குங் கண்ணா கண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலினோசை கொடுமைகூட்டுங் கண்ணா கண்ணா
குளிர்மைசாந்த மனலேகக்குங் கண்ணா கண்ணா
அழகுசொட்டும்பொருள்களெல்லாங் கண்ணா கண்ணா
அழிவைநாட்ட முந்திநிற்குங் கண்ணா கண்ணா

மாயக்கள்வன் நீயல்லவோ கண்ணா கண்ணா
மனதைக் கொள்ளைகொண்டு விட்டாய் கண்ணா கண்ணா
நோயுமின்று நீயெனக்கே கண்ணா கண்ணா
நொடிப்பொழுதில் மருந்துமாவாய் கண்ணா கண்ணா

தையல் சாபம் பொல்லாதென்பர் கண்ணா கண்ணா
தருணமிது வாழ்வளிப்பாய் கண்ணா கண்ணா
மையல்காட்டி மறைவதேனோ கண்ணா கண்ணா
வன்மமின்று விட்டிடுவாய் கண்ணா கண்ணா



## கார் கால மதி

உடலினை இறுகப் புல்லி
உயிரினை உறிஞ்சிக் கொண்டு
கடிதிலென் கண்ணனோடக்
கலங்கிடும் வதனம் போல
நடுவினில் நின்று வான
நல்லொளி கான்ற நீயும்
இடையிடை ஒளிதான் குன்றி
ஏங்குவ தேனோ சொல்லாய்.

உன்னுயிர்க் கொள்ளை கொண்டான்
ஒருத்தனு முளனோ செப்பாய்
என்னுயிர்க் காந்தன் போல
இரக்கமில் பாவி தானோ?
வன்மைசேர் கோபி மாதர்
வளர்ப்பபோ லுறவு முண்டோ?
இன்னுயிர் வாட நையும்
எனக்குமின் றிணைதான் நீயோ?

காதல னோடு கூடிக்
கர்வந்தான் மிகவுங் கொண்டோ
சாதலே காணும் பேதை
தவிக்க நீ வாட்டி நின்றாய்?
போதலே அவனுங் கொள்ளப்
புலனழிந் துருகு கின்றாய்
நீதி தானின்று கண்டாய்
நின்னொளி மழுங்கல் நன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னொளி தீயே போல
உடலினை வெதுப்பி நிற்கும்
உன்னொளி அரமே போல
உளத்தினை அறுத்து நிற்கும்
உன்னொளி விடமே போல
உயிரினை வாட்டி நிற்கும்
உன்னொளி அமிர்தம் போல
உவந்தநா ளொன்று முண்டே.

பண்ணிறை மொழியி னேடென்
பச்சைமால் வருநாள் நீயும்
வெண்ணொளி மீண்டும் பெற்று
மேதினி உலவல் வேண்டும்
தண்மதி நீதா னென்று
தரணியோ ரியம்பக் கேட்டேன்
உண்மையி லின்று நீதான்
ஊறுசெய் எரியே யாவாய்.



## மாயக் கள்வன்

கண்ணன் கருத்தை நீசென்று
கடிதினி லறிந்து வருவையடீ
பெண்ணென் றுலகில் பிறந்ததினால்
பெருகு துன்பத் துழல்கின்றேன்.

கோபிய ரிடையே தானிருப்பான்
குலமகள் குடியும் அவன்கெடுப்பான்
தாவியே யென்னை யன்றணைத்துச்
சத்தியம் பலவுஞ் செய்தாண்டீ!

மாயக் கள்வன் என்பதையும்
மறந்து நானும் மதிமயங்கி
தேயும் இங்கிலை தானடைந்தேன்
திட்டம் உளத்தினி லில்லையடீ!

பாச மெல்லாந் தொலையுதடீ
படுக்கை மிகவும் நோவுதடீ
ஆசை வார்த்தை அவன்காட்டி
அழகிய பருவங் கெடுத்தாண்டீ!

வான மதியுங் கூற்றமடீ
வயங்கு தென்றல் அனலுமடீ
பானம் எதுவும் விருப்பில்லை
பற்றியெ னுள்ளம் எரியுதடீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிலை நீயும் எடுத்தியம்பி
　　இன்றவ ளொருசொற் கேட்பையடா
பன்மொழி யவனுஞ் செப்பிடினே
　　பதரென் றிகத்தில் இகழ்வமடா !

பண்ணிசை நானும் மறப்பதில்லை
　　பாவியி னுருவும் மறப்பதில்லை
கண்மிகக் கண்டு களிப்புறவே
　　கண்ணன் அழகை விழையுதடா !



## கண்ணம்மா

கண்ணி னொளி நீயெனக்கு
　　காட்சி யடி நானுனக்கு
பண்ணி னொலி நீயெனக்கு
　　பாட்டி னிமை நானுனக்கு
எண்ண முற்ற போழ்தினிலே
　　எழுந்துவரு சித்திரமே!
வண்ணமுற வந்துதித்தாய்
　　வானணங்கே கண்ணம்மா !

சித்தி யடி நீயெனக்கு
　　சித்த னடி நானுனக்கு
சத்தி யடி நீயெனக்கு
　　தாச னடி நானுனக்கு
பத்தி யெய்திப் பாடுகையில்
　　பரிந்துவரும் அரும்பாவாய் !
முத்தி தரும் முழுமருந்தே !
　　மோதுமன்பே ! கண்ணம்மா !

அரங்க மடி நீயெனக்கு
　　ஆட்ட மடி நானுனக்கு
தரங்க மடி நீயெனக்கு
　　தவழ் மதியம் நானுனக்கு
உரங் கொண்ட உள்ளத்தை
　　உடைத்து விடும் பேரலையே !
மருங்கு நின்று மகிழ்வளிப்பாய்
　　மாதரசே கண்ணம்மா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலடி நீ யெனக்கு
சேரு கமழ் நானுனக்கு
மன்றல் ரதி நீயெனக்கு
மாரனடி நானுனக்கு
குன்றினிலே தவழ்ந்துவரும்
கொண்டல்நிகர் பூங்குழலாய்!
வென்றிதரும் விண்ணமுதே!
வேல் விழியாய்! கண்ணம்மா!

குல விளக்கு நீயெனக்கு
கொளுவு சுடர் நானுனக்கு
மலை விளக்கு நீயெனக்கு
மாட்சி யொளி நானுனக்கு
கலகலெனப் பேசி வருங்
கண்மணியே! காரிகையே!
உலகொளிர வந்தவளே!
ஓங்குமன்பே! கண்ணம்மா!

அன்னமடி நீ யெனக்கு
அழகு நடை நானுனக்கு
கன்னலடி நீ யெனக்கு
காட்டு சுவை நானுனக்கு
உன்னி யுன்னிப் பார்த்திடிலோர்
உவமையில்லை உன்றனுக்கே
என்னரிய பேரழகே!
எனதுயிரே! கண்ணம்மா!

# கண்ணன் அருட்பத்து

கார்முகில் வண்ணங் காட்டிக்
கருணையே பொழிந்து நாளும்
சீரெலாம் தந்து மென்றன்
சிந்தையை யொடுக்கி யுய்த்துப்
பாரினிற் பெருகும் நல்ல
பயனெலா மீந்தாய் கண்ணா!
வாரண மழைத்த வன்று
வானினில் வந்த கோவே!

பொன்னையே போற்றி நாளும்
புவியினி லுழன்று மாய்ந்து
தன்மையே நல்ல தின்றித்
தரணியி லொழுகு மென்னைக்
கன்மமே தொலைத்து நீயுன்
கருணையே காட்டி யாண்டாய்
அன்னையே நீயே யென்றன்
அப்பனே! வாழ்வே! கண்ணா!

மண்ணினில் விழையு மின்பம்
மகிழ்வொடு துய்த்து மாய்ந்து
பண்ணது பொங்கு முன்றன்
பாரிசை மறந்தே னைக்
கண்ணினிற் கருணை காணக்
காரெனும் நிறமுங் காண
விண்ணினை விட்டு நீங்கி
விழைவுட னுண்டாய் கண்ணா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்தம் இன்பந் தன்னில்
மயக்கமே கொண்டு வாடிப்
போதவிழ் மலர்ப்பூந் தாளைப்
போற்றியான் வாழே னுக
ஆதியே! முதலே! என்றன்
அண்ணலே! என்னை நாடி
ஓதியான் தினமும் போற்ற
உலகினில் வந்தாய் கண்ணா!

பொறையினை யிழந்து நானும்
புன்னெறிச் செய்கை கொண்டு
மறையெலாம் புகழு முன்றன்
மாண்பினைத் துறந்தே சோரக்
கறையவை யெல்லாம் போக்கிக்
கருணைநீ காட்டி யாண்டாய்
குறையெலா மிரந்து வேண்டக்
குவலய மளிக்குங் கண்ணா!

பத்தியை மறந்து நானும்
பார்மிசை யின்பந் தன்னில்
மெத்தவே விழைவு கொண்டு
மேதினி வாழ்வை நம்பி
முத்திதான் கூட்டி வைக்கும்
உன்னருள் காணே னுகச்
சித்திநீ யீந்து மென்னைச்
செகத்தினி லாண்டாய் கண்ணா!



நீலமா மலையே போலும்
நிமிர்ந்ததோர் நிறைவு கொண்டு
சாலவே விஞ்சும் நல்ல
சாகச நடையுங் காட்டி
வேலைபோற் பொங்கு மென்றன்
வினையினை யோட்டி வைத்தாய்
ஆலமே கக்கும் நல்ல
அரவணை துயின்ற கண்ணா!

பேயெனத் திரிந்து யானும்
பெறுபய னென்று மின்றித்
தாயினிற் சிறந்த நின்றன்
தயையினைக் கிட்டே னுகி
ஓயுமோ ரெல்லை தன்னில்
உவப்பொடு மென்னை யாண்டாய்
மாயமாம் வடிவங் கொண்டு
மன்பதை யளிக்குங் கண்ணா!

கண்ணினி லொளியு மின்றிக்
கருத்தினி லுவகை யின்றி
எண்ணமே யற்று யானும்
இருளினிற் றிரியுங் காலை
மண்ணினில் தோற்றி நீயுன்
மாண்புறு விளக்கந் தந்தாய்
பண்ணிறை குழலே யூதிப்
பாரினை மயக்குங் கண்ணா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணலே! உன்னை நானும்
அகமதிற் கொண்டு நித்தம்
எண்ணம்வே றேதுவு மின்றி
இகமதில் வாழ வைப்பாய்
உண்மையா முனது தொண்டில்
உள்ளந்தான் பற்றுக் காண
அண்மையிற் கிட்டி நீங்கா
அருளதும் பொழிவாய் கண்ணா!



## இதயத் துடிப்பு

"துன்ப நினைவுகளும்
சோர்வும் பயமு மெல்லாம்
அன்பி லழியுமடீ—கிளியே
அன்புக் கழிவில்லை காண்."

—பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரமும் பூங்கொடியும்

வளைந்துதான் வீழுமொரு படுகொம் பொன்றை
வஞ்சிநீ வையத்தி லுறுதி யென்றே
இளந்தளிர்கள் பலவெறிந்து சுற்றிக் கொண்டாய்
இன்பமென அதிற்படர்ந்து பூத்து நின்றாய்
வீழ்ந்தழியும் படுகொம்பும் மீட்சி பெற்று
மேதினியிற் றளிர்விடுதல் விந்தை யன்றோ
உளந்தனில்நின் றூறுமோ ருயர்பே ரன்பின்
உறுதிறனை யின்றுலக மறியச் செப்பும்.

அன்பினிலே கவிதையெழும் அகந்தை மாயும்
அடுத்துவருந் துன்பமெலா மஞ்சி யோடும்
மன்பதைக ளுய்வுகொளும் மகிழ்வு சேரும்
மகிதலத்தி லன்பினுக்கோ விலையு மில்லை
இன்பமென விண்ணவர்கள் துய்த்து வாழும்
இன்னமுதும் அன்பினுக்கோ ஈடா மில்லை
அன்புள்ள முருகுங்கால் ஆங்குத் தோற்றும்
அருட்சக்தி வடிவமெலாம் அவனி யோர்க்கே.

அன்பென்னும் ஊர்தியிலே பறப்ப வர்க்கோ
அதன்றாக்கம் தலைச்சுழற்சி பலவே யாகும்
அன்பினைநீ வளர்ப்பதற்குத் தியாகம் வேண்டும்
அதிலன்பு தளிர்விட்டே ஓங்கிக் காணும்
அன்பென்னப் பலபேர்கள் சாற்று கின்றார்
அவனிதனில் மெய்யன்பைக் கண்டிலா தார்
அன்பினிலே திளைத்தவர்க்குச் சிவனார் தோற்றம்
அரைநொடியிற் காணுமென்றே அகிலஞ் செப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவளும் நானும்

ஜென்மாதி ஜென்மத்தின் சேர்க்கை தானோ
செய்தபெருந் தவப்பயனின் விளைவு தானோ
மன்னாதி மன்னர்க்கும் வாழ்விற் கிட்டா
மங்கையவ ளின்றென்னை யகத்திற் சேர்ந்து
பொன்னான உரைகளினாற் புன்மை போக்கிப்
புத்தொளியும் புதுவாழ்வும் புகுத்திவைத்தென்
அன்னையாய்த் தந்தையாய் அரிய சுற்றம்
அனைத்துமாய் அவளன்பு காட்டி நின்றாள்.

எண்ணாத எண்ணமெலா மெண்ணி யெண்ணி
இருள்வழியில் யான்சென்றே யலையுங் காலை
பண்ணான இசைசேர்த்துப் பாடல் பாடப்
பகுத்தறிவும் பலதிறனும் என்னிற் சேரப்
பெண்ணாவாள் பெருந்தகையாள் பிரமன் நாவிற்
பெரிதுறையும் பெருமாட்டி போல்வாள் நங்கை
கண்ணான கண்ணேயாம் கருத்தினுள்ளே
கவின்மணியாய் நின்றென்னை யொளிர வைத்தாள்.

குளிர்காவும் நறுமலரும் கூடித் தோன்றக்
கொழுமைசேர் இன்காற்றும் மெல்ல வீச
அளியினமும் அன்னமெலாம் ஆங்குக் காண
அசைந்தோடும் அருவிகளும் மருங்கு பாய
நளினமெனுங் கரமுடையாள் பக்கல் நின்றே
நானிலத்து வியப்புக்கள் தோன்ற வைப்பாள்
எளிமைதரும் வாழ்வுமெலா மிகத்தி லோட
ஏற்றஞ்சேர் விண்ணவனாய் மாறி நிற்பேன்.

இடிமுழக்கம் பெருங்காற்றும் இரைந்து வீச
எதிர்த்துவருந் துன்பவெள்ள மென்னையாழ்த்தப்
படியிலுள பொருட்களெலாம் பகையாய் மாறப்
பாரசைந்து கிடுகிடுத்துப் பதற வைக்கத்
துடியிடையாளெனைக் கணந்தான் சோரவைப்பாள்
சோதிமுகந் தனைக்காட்டிச் சுவர்க்க மீவாள்
கடிதிலவள் மனம்படிய நடக்கா விட்டால்
கனத்தவிடி முழக்கமெலாம்மீட்டுந் தோற்றும்.

இன்றெனக்குத் தரணிதனில் இவளே தெய்வம்
இருநிதியும் பலபேறும் இவளே யாவாள்
குன்றுருண்டு வரும்போதுங் குனிவு கொள்ளேன்
குவலயத்தார் கொடுமைகளுக்கஞ்ச லில்லேன்
நன்றிதுபார் தீதிதுபார் என்னக் காட்டி
நங்கையவள் நாளுமெனை நெறியிற் சேர்ப்பள்
என்றுமவள் வாழவைப்பாய் அன்னாய் சக்தி!
இகத்திலுன்றன் புதல்விதனை நீடு காப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெகத்தில் என்தெய்வம்

புன்னகை பூக்கு மின்பப் பொலிவுறு
முகமுங் காணப்
புனிதமே பொருந்தும் நல்ல புகழ்நிறை
மனமுங் கொண்டு
தன்னிலே திரியு மென்னைத் தடுத்துநீ
பிணித்து வைத்துத்
தகவெலாந் தந்து மென்றன் தாழ்வுமே
போக்கி யுய்த்துப்
பொன்னினைக் கொடுத்துங் காணாப் போதனை
யெல்லா மீந்து
புகழ்தரு ஞான மெல்லாம் பொருந்தியே
யென்னிற் சேர
நன்மைகள் நல்கி நாளும் நானிலந்
தன்னில் வாழ
நங்கையே! நீயு மென்னை நயமுடன்
வைத்தே யாண்டாய்.

சேல்துவள் பழித்து நீண்ட செவ்வரி
படர்ந்த கண்ணும்
செகத்தினை மயக்கி யாளுந் திங்கள்சாய்
வதனந் தானும்
பாலினுமினிய வுன்றன் பண்ணிறை
மொழியுங் காட்டிப்
பாவையே! நீதா னென்னைப் பரிவுட
னிகத்தி லாண்டாய்



கோலமே குன்றி நல்ல குணமது
மொன்று மின்றிக்
கொடுமைதான் விஞ்சு மென்னிற் குணமென
யாது கண்டாய்?
வேலைபோற் பொங்கு முன்றன் விழைவுறும்
அன்புக் கீடாய்
வெறுமைசே ருடலி லொன்றும் ஆவிதான்
ஈடா கும்மோ?

அன்னைதன் மகனென் றெண்ணி ஆன்றதோ
ரன்பு கொண்டாள்
அவனியில் தனய னென்றே அப்பனு
மன்பு கொண்டான்
நன்னிலப் பதிதா னென்று நாயகி
யன்பு கொண்டாள்
நம்முடை தந்தை யென்று சேய்களு
மன்பு கொண்டார்
தன்னருந் தமைய னென்று தங்கைதா
னன்பு கொண்டாள்
தகவுறு நேசங் கண்டு தோழனு
மன்பு கொண்டான்
என்னநீ நன்மை கண்டு ஏழையி
லன்பு கொண்டாய்?
இகத்தினி லெல்லா ரன்பும் ஏகமா
யுன்னிற் கண்டேன்.

குணமது பொங்கு முன்றன் குழந்தைபோ
    லுள்ளந் தன்னில்
குவலயம் ஈடு கொள்ளாக் குளிர்மைசேர்
    குறும்பு தன்னில்
அணுகிடு துன்ப மோட்டும் அருள்நிறை
    முறுவல் தன்னில்
அவனியி லெங்குங் காணா அன்பினின்
    பெருக்கந் தன்னில்
கணமுமே மறக்க வொண்ணாக் கனிவுறு
    தோற்றந் தன்னில
காசினி காட்டா இன்பங் கடிதினி
    லொளிரக் கண்டேன்
பிணியொடு மூப்புச் சாக்கா டஞ்சிடாப்
    பெற்றி பெற்றேன்
பிரளயம் வந்துற் றாலும் பின்னிடா
    வலியும் பெற்றேன்.

உடலினை மெலிய வாட்டி யுறுத்திடும்
    பிணியைப் போக்க
உலகினி லெங்குங் காணா வுன்னத
    மூலி தானாய்க்
கடலினைப் போல வுள்ளக் கரையினை
    யுடைத்துப் பாயுங்
கணக்கிலாத் துன்பம் நீக்குங் கருணையின்
    தோற்ற மாகி



இடையிடை வீழ்த்த நாடி யெதிர்வரு
    மிடர்கள் நீக்கி
இகத்தினி லென்னைக் காக்கு மேத்துநற்
    றெய்வம் போலாய்
மடமையே நிறைந்த நல்லாய்! மருங்குநீ
    நின்றே யாள்வாய்
மல்குமோ ருன்ற னன்பால் வையத்தில்
    வாழ்வு பெற்றேன்.

பூவையே! நீதான் செம்மைப் பூவினில்
    வாழும் மாதோ!
புவனமே படைக்கு மந்தப் புனிதனின்
    தேவி தானோ!
காவினிற் பொலிந்து காணுங் கவின்பெறு
    மலரோ! தேனோ!
கருணையே காட்டி யாளுங் கண்ணியத்
    தெய்வப் பெண்ணோ!
பாவமே தீர மக்கள் பரமனை
    யேத்திப் பாடப்
பக்கல்நின் றெந்த நாளும் பயனருள்
    பாவை தானோ!
தேவிநீ யென்றி யானுஞ் செகத்தினி
    லுன்னைப் போற்றத்
திறனெலா மீந்து நீயுஞ் சீர்பெற
    வைப்பாய் தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாய் தந்தை தானும் பெருக்கியே
காட்டு மன்பு
பின்னமே நிறைந்த வென்றன் பிறப்பினைத்
துளிர்க்கா தாக
உற்றதோர் தாயை விஞ்ச உலகினிற்
சுற்றம் விஞ்ச
உன்னருள் நாளுங் காட்டி உவப்பெலாந்
தந்தே யாண்டாய்
கற்றதோர் கல்வி யாவுங் காசினி
தன்னிற் காணாக்
கருதுயோ ரின்ப மெல்லாங் காட்டி நீ
மகிழ வைத்தாய்
பெற்றியே நிறைந்த நல்ல பேறெலாம்
பெற்ற மாதே!
பித்தனா யலையு மென்னைப் பிழைக்கவே
வைத்த வாழ்வே!

எத்தனை யெதிர்ப்புத் தானும் எழுந்தெழுந்
துறுத்தும் போதும்
ஏங்கிநீ வாடா நின்றே ஏழையி
லன்பு காட்டிப்
பித்தனா யலையு மென்னைப் பேணியுன்
னிதயங் கொண்டாய்
பெட்புறு விளக்கந் தந்தே பெருமக
னாக்கி வைத்தாய்




இத்தின மென்னை யாரும் எதுவெனக்
கேற்ற மென்றால்
என்தவப் பெரும்பே றேநின் ஏற்றஞ்சே
ரன்பே யென்பேன்
சித்தனே யாக வென்னைச் சிறுகணப்
போழ்தில் மாற்றுந்
தெய்வமே! தெவிட்டா அன்பே! சென்மமே
தொடர்ந்தாய் வாழி!

தந்தைதாய் தமரு மாகித் தரணியிற்
சிறந்த பேறாய்த்
தழைத்திட வைத்தே யாளுந் தமியனின்
தெய்வம் போலாய்ச்
சிந்தையில் நிறைந்த நல்ல செம்மைசே
ரொளியு மாகிச்
சீலமே பெருக வென்னைச் செகத்தினில்
வைக்கும் பாவாய்
வந்தனை செய்து நின்னை வையத்தில்
வாழ்த்து கின்றேன்
வாழ்கநீ பல்லாண் டென்றே வள்ளலைப்
போற்று கின்றேன்
முந்தியான் செய்த செம்மைத் தவத்தினின்
விளைவா யின்னாள்
முத்திசேர் நெறியிற் போக்க முதல்வி நீ
தோற்றம் பெற்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியி னம்ச மாகத் தரணியில்
நாளுந் தோற்றித்
தாயவள் விளக்கும் நல்ல தகவெலா
மென்னிற் காட்டிச்
சித்தியுஞ் செல்வப் பேறுஞ் சேர்ந்துள
பலவு மீந்தே
செல்விநீ யெனையாட் கொண்டாய் செகத்திலென்
தெய்வ மானாய்
பத்தியோ டுன்னை நானும் பன்முறை
பாடல் செய்வேன்
பனுவலை யுன்றாள் வைத்துப் பணிந்துமே
யேத்தல் செய்வேன்
உத்தமர் கூட்டத் தென்னை யொருவனே
யாக்கி வைக்கும்
உன்திற னென்றும் வாழி! ஒப்பிலா
மணிநீ வாழி!

அன்பே வாழி! அன்னாய் வாழி!!
உலகிடை உய்ந்தேன் உன்னருளாலே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை யுலகில் ஓர் ஜோதி !

'யாழ்ப்பாணன்' புனைந்துள்ள

# 'மாலைக்கு மாலை'

முதலிய கவிதைகள்

மொழி, வாழ்த்து, காட்சிகள் நீதி, பாலர்கீதம், கண்ணன், இதயத் துடிப்பு என்னும் பிரிவுகளில் 55 கவிதைகள் கொண்ட முதலாங் கவிதைத் தொகுதி. நாமக்கல் கவிஞரின் முன்னுரை கொண்டுள்ளது.

புதுமணத் தம்பதிகளுக்குச்
சிறந்த திருமணப் பரிசு.

**பிரதி விலை ரூ. 2-8-0**

பிரசுரம் :

| இந்தியாவில் | இலங்கையில் |
|---|---|
| சக்தி காரியாலயம் | வடலங்கா புத்தக சாலை |
| சென்னை-14 | பருத்தித்துறை |

**எதிர்பாருங்கள் !**

## கவிதையுலகில் மற்றோர் ஜோதி !

'யாழ்ப்பாண'னது இரண்டாம் கவிதைத் தொகுதியாகிய

# 'தேச பக்தன் சபதம்'

எந்தையை மறத்தல் கூடும்
அன்னையை மறத்தல் கூடும்
இகத்தினி லருமையான
பந்தமே காட்டு மென்றன்
பாரியை மறத்தல் கூடும்
பக்கலில் நின்று நாளுஞ்
சிந்தையைக் கவரு மென்றன்
சிறார்களை மறத்தல் கூடும்
செல்வத்தை........................
...................................

என ஆரம்பித்து விறுவிறுப்புடன் செல்லுகின்ற தேசியப் பாடல்களையும், அஞ்சலி, பெரியோர் என்னும் பகுதிகளில் பல பாடல்களையும் தாங்கிக் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

பிரசுரம் :

| இந்தியாவில் | இலங்கையில் |
|---|---|
| சக்தி காரியாலயம் | வடலங்கா புத்தகசாலை |
| சென்னை—14. | பருத்தித்துறை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org